بسم اللہ الرحمن الرحیم

# اللہ نیکوں کا سرپرست ہے (ٹمل)

# அல்லாஹ்வே நல்லோர்களின் பொறுப்பாளன்

உருது மூலம்:-

**மௌலானா பீர் துல்.:.பிகார் அஹ்மத் நக்ஷ்பந்தீ, முஜத்தீதி [ரஹ்]**

حضرت مولانا پیر ذوالفقار احمد نقشبندی مجددی رحمۃ اللہ علیہ

தமிழில்:-

**மௌலவி ரியாஜுத்தீன் ஹஸனீ**


**தாருல் இஸ்லாஹ்**

(சமூக சீர்திருத்தப் பாசறை)

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | அல்லாஹ்வே நல்லோர்களின் பொறுப்பாளன் |
| ஆசிரியர் பெயர் | : | மௌலானா மௌலவி ரியாஜுத்தீன் ஹஸனீ |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| பக்கம் | : | 52 |
| விலை | : | ரூ.35.00 |
| இரண்டாம் பதிப்பு | : | ஜூன் - 2026<br>துல் ஹிஜ்ஜா - 1447 |
| தட்டச்சு | : | மௌலானா, அப்துல் காதிர் ஹஸனீ, PH. 6385575974 |
| வெளியீட்டு எண் | : | 5 |

**நூல் கிடைக்குமிடம்:**

சமூக சீர்திருத்தப் பாசறை

(தாருல் இஸ்லாஹ்) பள்ளபட்டி.

செல்: 89256 11688

# பொருளடக்கம்

1. மதிப்புரை!....................................................4
2. வாழ்த்துரை!....................................................8
3. அல்லாஹ்வே நல்லோர்களின் பொறுப்பாளன்................10
4. பொறுப்பெடுத்தல் என்பதின் பொருள்............................10
5. ஒரு உதாரணத்தின் மூலம் தெளிவு.............................10
6. அல்லாஹ் பொறுப்பெடுத்த அற்புத உதாரணங்கள்..........13
7. பருவம் மாறி பழமளித்தவன்.......................................13
8. பாலைவனத்தில் பானமளித்தவன்...............................14
9. சொத்தைக் காக்க சொந்தங்களை அனுப்பியவன்..........16
10. பதினோரு மகன்களும் கவர்னர்களாக..........................18
11. அள்ள அள்ள அமுத சுரபியாய் தானியக் கருவூலம்....21
12. ஒன்பதுக்கு ஒன்பது ஒரே நேரத்தில்...........................23
13. தாடி உள்ளவர்களுக்கே சாதகமானவன்.......................29
14. உன் படையா! என் படையா!.........................................40
15. சிட்டுக் குருவிக்கும் இங்கு சிறகடிக்க அனுமதியில்லை...42
16. நான் இல்லாத போது நீ எங்கு போனாய்?.......................43
17. நீ எனக்காகவெனில் நான் உனக்காக.........................46
18. பார்வைக்குத் தெரியாத பல படைகள்.......................49

# மதிப்புரை!

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

எல்லாப் புகழும், புகழ்ச்சியும் அகிலங்கள் அனைத்தையும் படைத்துப் பரிபாலித்து வரும் எல்லாம் வல்ல அல்லாஹ் ஒருவனுக்கே உரித்தாகுக! அவனது சாந்தியும், சமாதானமும் நமது வழிகாட்டி முஹம்மத் ﷺ அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தார், தோழர்கள் மற்றும் நேர்வழியைப் பின்பற்றிய நல்லோர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக!

“அல்லாஹ்வே நல்லோர்களின் பொறுப்பாளன்” (வஹுூவ யதவல்லஸ் ஸாலிஹீன்) என்ற அல்குர்ஆனின் உயரிய சிந்தனையைத் தலைப்பாகக் கொண்ட இந்த உருது உரையின் தொகுப்பை உங்கள் கரங்களில் ஒப்படைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியும், பெருமிதமும் கொள்கிறேன். அல்ஹம்துலில்லாஹ்.

இன்றைய பரபரப்பான, பொருள் முதல்வாத உலகில் மனிதன் ஏதேதோ காரணங்களுக்காகத் தன் நிம்மதியை இழந்து தவிக்கிறான். எதிர்காலம் குறித்த பயமும், நிகழ்காலம் குறித்த கவலைகளும் அவனது இதயத்தை பாரமாக்குகின்றன.

இத்தகைய சூழலில், ஓர் உண்மையான முஃமினுக்கு (இறையம்பிக்கையாளருக்கு) மிகப்பெரிய ஆறுதலும், கேடயமும் எதுவென்றால், “என் காரியங்கள் அனைத்திற்கும் அல்லாஹ்வே பொறுப்பாளன்” என்ற அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

இந்த மொழிபெயர்ப்பு தொகுப்பு வெறுமனே வாசித்துவிட்டு கடந்து செல்லும் பக்கங்கள் அல்ல; மாறாக,

இறைநம்பிக்கையை (ஈமான்) புதுப்பித்தல்: சோதனையான காலகட்டங்களில் நாம் எவ்வாறு அல்லாஹ்வை மட்டுமே சார்ந்து வாழ வேண்டும் என்பதை உணர்த்துதல்.

நல்லோர்களின் அடையாளம்: அல்லாஹ் தன் பொறுப்பில் எடுத்துக்கொள்ளும் அந்த "ஸாலிஹீன்கள்" (நல்லோர்கள்) யார்? அவர்களின் குணநலன்கள் என்ன? என்பதை குர்ஆன் மற்றும் சுன்னாவின் ஒளியில் விளக்குதல்.

வாழ்வியல் வழிகாட்டுதல்: இம்மையிலும், மறுமையிலும் வெற்றியைத் தரும் உண்மையான "தவக்குல்" (இறை நம்பிக்கை) மற்றும் "தக்வா" (இறையச்சம்) ஆகியவற்றை நம் அன்றாட வாழ்வில் எவ்வாறு செயல்படுத்துவது என்பதற்கான வழிகாட்டுதல்.

இறைத்தூதர்களின் வாழ்விலும், சான்றோர்களின் வரலாற்றிலும் அல்லாஹ் அவர்களின் பொறுப்பை ஏற்று, எப்படிப்பட்ட அற்புதங்களை நிகழ்த்தினான் என்பதைப் படிக்கும்போது, வாசகர்களாகிய உங்களுடைய இதயங்களிலும் ஓர் ஆழமான அமைதியும், புது உத்வேகமும் பிறக்கும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

இந்தப் புத்தகத்தை மொழிபெயர்ப்பதற்கு எனக்கு உடல்நலத்தையும், மனவலிமையையும், அவசியமான அறிவையும் தந்த எல்லாம் வல்ல அல்லாஹ்விற்கே மீண்டும் நன்றி செலுத்துகிறேன். எனது இந்தச் சிறிய முயற்சியை அல்லாஹ் அங்கீகரித்து, எனக்கும், இதனை வாசிக்கும் உங்களுக்கும், நம்முடைய மறுமை வாழ்வின் வெற்றிக்குரிய நற்செயலாக இதை ஆக்கி அருள் புரிவானாக!

இந்தப் புத்தகத்தை வாசிக்கும் ஒவ்வொரு வாசகரின் வாழ்விலும், அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை இன்னும் பலமடங்கு பெருக வேண்டும் என்பதே எனது துஆ (பிரார்த்தனை).

இப்படிக்கு:

மௌலானா மௌலவி

**முஃப்தி ஷகீல் அஹ்மத் நக்ஷபந்தி**

துணை முதல்வர்

மத்ரஸா பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்,

வேலூர். செல்;9444453232

# دعائیہ کلمات بابرکات

## محبوب العلماء والصلحاء حضرت اقدس مولانا حافظ پیر ذوالفقار احمد صاحب نقشبندی مجددی مدظلہ العالی دامت برکاتہم

اللہ رب العزت کی سنت ہے کہ انبیاء کرام علیہم الصلوۃ والسلام کو اپنی قوم کی زبان میں مبعوث فرماتے ہیں۔ چنانچہ ارشاد باری تعالی ہے۔ ''وَمَآ أَرۡسَلۡنَا مِن رَّسُولٍ إِلَّا بِلِسَانِ قَوۡمِهِۦ''(اور ہم نے ہر رسول کو ان کی قوم کی زبان ہی میں مبعوث کیا ہے)

اس زمانے میں علاقائی زبان میں اصلاح وارشاد تصوف وسلوک نیز دین کے تمام ہی شعبوں کا لسانی وقلمی کام جلد اثر انداز اور قبولیت عامہ کا ذریعہ ہے۔

تمل زبان بہت قدیم زبان ہے، اس زبان کے بولنے والے دنیا کے مختلف ممالک میں کثیر تعداد میں آباد ہیں، تصوف کے علوم تقریبا یا تو عربی میں ہیں یا فارسی اور اردو زبان میں۔ موجودہ دور میں سلسلۂ عالیہ نقشبندیہ سے اللہ رب العزت نے سارے عالم میں خوب فیض جاری فرمایا ہے۔

نہ صرف تمل علاقے کے لیے بلکہ اس زبان کے بولنے والے سب ہی بندگان خدا کے حق میں خواہ وہ دنیا کے جس خطے میں ہوں یہ بڑی نعمت ہے کہ عزیز گرامی قدر مولانا مفتی شکیل احمد صاحب نقشبندی مجددی سلمہ زید مجدہ اپنی مجالس میں اس فقیر کے طویل خطبات سے اہم اہم مضامین ونکات کا انتخاب کرتے ہیں اور انہیں بزبان تمل ترجمہ کرکے مختصر ومفید اور جامع انداز میں رسائل کی شکل میں طبع کروا کر ہزاروں کی تعداد میں عام کرتے ہیں، رمضان المبارک میں دوران اعتکاف ان مرتب شدہ رسائل کی مستقل تعلیم ہوتی ہے، الحمدللہ ہزاروں کا مجمع ان رسائل سے استفادہ کررہا ہے۔

اللہ رب العزت سے دعا ہے کہ عزیز موصوف کی اس محنت کو شرف قبولیت بخشے اور دارین میں نفع ونجات کا ذریعہ بنائے۔ آمین

فقیر ذوالفقار احمد نقشبندی مجددی رحمتہ اللہ علیہ

کان اللہ لہ عوضًا عن کل شیءٍ

# வாழ்த்துரை!

மஹ்பூபுல் உலமா வஸ்ஸுலஹா ஹஜ்ரத் அக்தஸ் மௌலானா ஹாபிழ் ஃபீர் ஜுல்ஃபிகார் அஹ்மத் ஸாப் நக்ஷ்பந்தி, முஜத்திதீ ﵀ அவர்களின் பரக்கத் பொருந்திய துஆவின் வார்த்தைகள்.

நபிமார்களை அவர்களின் சமூக மக்கள் என்ன மொழி பேசுகிறார்களோ அதே மொழியைப் பேசுபவர்களாக அனுப்புவது அல்லாஹ்வுடைய சுன்னத்தாகும். இதையே எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا أَرْسَلْنَا مِنْ رَّسُولٍ إِلَّا بِلِسَانِ قَوْمِهِ

**“மேலும் நாம் ஒவ்வொரு தூதரையும் அவர்களுடைய சமூகத்தாரின் மொழியைப் பேசக்கூடியவர்களாக அனுப்பியுள்ளோம்.”**

தற்காலத்தில் சீர்திருத்தம் மற்றும் வழிகாட்டுதல், சூஃபித்துவம் மற்றும் சுலூக் உடைய உபதேசங்கள், அதே போல் மார்க்கத்தின் அனைத்து துறைகளிலும் பேச்சு மற்றும் எழுத்தின் மூலமாக நடைபெறும் சேவைகள் அனைத்தும் அவரவர்களுடைய பிராந்திய மொழியில் இருந்தாலே விரைவான தாக்கத்தையும், பொது அங்கீகாரத்தையும் பெறக் கூடியதாக இருக்கும்.

அவ்வகையில் தமிழ் மொழி என்பது மிகத் தொன்மையான மொழியாகும் . அதைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளவர்கள் உலகம் முழுவதும் அதிக எண்ணிக்கையில் பரவியுள்ளனர்.

ஃசூஃபித்துவ ஞானங்கள் அனைத்தும் கிட்டத்தட்ட அரபு, பாரசீகம் மற்றும் உருது மொழிகளில் மட்டுமே உள்ளன.

தற்போதைய சுழலில், அல்லாஹ் நக்ஷ்பந்தி தரீக்காவின் மூலம் முழு உலகிலும் சீர்திருத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறான். தமிழ்நாட்டிலுள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல் இந்த மொழியைப் பேசக்கூடிய அல்லாஹ்வின் அடியார்கள் உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும் சரி அவர்களுக்கும் இந்த செயல் மிகப் பயனுள்ளதாகும்.

நமது அன்பான மௌலானா முஃப்தி ஷகீல் அகமது சாஹிப் நக்ஷ்பந்தி முஜத்திதீ அவர்கள் இந்த ஃபக்கீருடைய பல உபதேசங்களிலிருந்து முக்கியமான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றை தமிழில் மொழிபெயர்த்து, குறுகிய, பயனுள்ள துண்டுப்பிரசுரங்களாகவும் மற்றும் சிறு தொகுப்புகளாகவும் அச்சிட்டு ஆயிரக்கணக்கானோருக்கு விநியோகிப்பது ஒரு பெரிய பாக்கியமான காரியமாகும்.

மேலும் புனித ரமலான் மாதத்தில், இந்தத் தொகுப்புகள் தொடர்ந்து படிக்கப்பட்டு வருலதும் மிக மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். அல்ஹம்துலில்லாஹ், ஆயிரக்கணக்கான மக்கள் இதனால் பயனடைகிறார்கள்.

ஹஜ்ரத் அவர்களின் இந்த முயற்சி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று நான் அல்லாஹ்விடம் விஷேசமாக துஆ செய்கிறேன். அல்லாஹ் அவர்களை மன்னித்து, அவர்களுக்கு நன்மை மற்றும் மன்னிப்பதற்குக் காரணமாக இதை ஆக்குவானாக.! ஆமீன்.

**பீர் துல்ஃபிகார் அஹ்மத் நக்ஷ்பந்தீ, முஜத்தீதி [ரஹ்]**

# அல்லாஹ்வே நல்லோர்களின் பொறுப்பாளன்

## பொறுப்பெடுத்தல் என்பதின் பொருள்

وَ هُوَ يَتَوَلَّي الصَّالِحِيْنِ

"அவனே நல்லோர்களின் பொறுப்பாளனாக இருக்கிறான்" குர்ஆனில் அல்லாஹ் என்று மிகத் தெளிவாக கூறியுள்ளான். பொறுப்பாளன் என்றால் தன் பராமரிப்பில் உள்ளவரின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், அவரின் நல்ல, தீய காரியங்கள் அனைத்திற்கும் பொறுப்பெடுப்பதற்குமே கூறப்படும். உதாரணமாக ஒரு தந்தை தன் மகனுக்கு பொறுப்பாளராக உள்ளார். எனவே அவனின் உணவு, உடை, படிப்பு, ஆரோக்கியம் ஆகிய அனைத்துத் தேவைகளுக்கும் தந்தையே பொறுப்பாளியாவார்.

அவ்வாறே அவனால் ஏதேனும் நஷ்டம் ஏற்பட்டாலும் அதற்கும் அவரே பொறுப்பாளியாவார். நீங்கள் பார்த்திருக்கக் கூடும் யாரேனும் ஒரு சிறுவன் பக்கத்து வீட்டு ஜன்னல் கண்ணாடியை கல்லெறிந்து உடைத்தாலும் அதற்குண்டான பணமும் தந்தையிடம் இருந்தே வசூலிக்கப்படும். அவர்தான் பொறுப்பெடுத்து அத்தொகையை நிறைவேற்றியாக வேண்டும்.

## ஒரு உதாரணத்தின் மூலம் தெளிவு

பொறுப்பாளர் என்று ஒருவர் இருந்தால் எவருக்கும் எக்கவலையும், சிரமமும் இருக்காது. ஒரு சிறுவன் தன் நண்பனிடம் நான் ஹஜ்ஜுக்குச் செல்கிறேன் என்றான்.

அதற்கு அந்த நண்பன் உன்னிடம் பணம் உண்டா என்று கேட்டான். அவன் இல்லை என்று கூற, மீண்டும் அவன் ஹஜ்ஜிற்குச் செல்வதற்கு விண்ணப்பம் செய்து விட்டாயா என்று கேட்டான். அதற்கும் இல்லை என்றான்.

சரி உனக்கு ஹஜ் செய்யத் தெரியுமா என்று கேட்டதற்கும் இல்லை என்றான். சரி! நீ மக்கா மதினாவில் எங்கு தங்குவாய்? என்று கேட்டதற்கும் தெரியவில்லை என்றான். டிக்கெட் எடுத்தாயிற்றா? என்று கேட்டதற்கும் தெரியாது என்றான். இவ்வாறு அனைத்து கேள்விகளுக்கும் இல்லை என்று பதில் அளித்தபோது, கேள்வி கேட்ட நண்பன் வியந்துபோய் பிறகு எப்படித்தான் நீ ஹஜ் செய்வாய் என்று கேட்டான்.

அதற்கு அவன் ஏனெனில் நான் என் தந்தையுடன் ஹஜ்ஜுக்குச் செல்கிறேன் என்று சிரித்துவாறு கூறினான். நான் என் தந்தையுடன் செல்கிறேன் என்ற ஒரு பதிலில் அவனது அனைத்து கேள்விகளுக்கான விடை மறைந்துள்ளது. எனவே என்னுடைய எல்லாத் தேவைகளையும் என் தந்தை பூர்த்தி செய்வார். அனைத்து சாதக, பாதகங்களுக்கும் அவரே பொறுப்பாவார் என்பதே இதன் அர்த்தமாகும்.

அல்லாஹ் தன் அடியார்கள் சம்பந்தமாகவும் இதே வார்த்தையை தான் பயன்படுத்தியுள்ளான்.

وَ هُوَ يَتَوَلَّى الصَّالِحِيْنِ

**“அவனே நல்லடியார்களின் பொறுப்பாளனாக உள்ளான்”.**

எனவே எந்த அடியான் பாவத்திலிருந்து விலகி நன்மைகள் செய்து, தன் வாழ்வை நல்ல முறையில் கழிக்க

முடிவெடுப்பானோ, உடனடியாக அவனுக்கு அல்லாஹ் பாதுகாவலனாகவும், பொறுப்பாளனாகவும் மாறிவிடுகிறான். அவனது அனைத்து தேவைகளையும் பூர்த்திச் செய்கிறான். ஒருபோதும் அவனை பிரச்சனைகளில் சிக்கித் தவிக்க விடமாட்டான். எல்லாத் துன்பங்களில் இருந்தும் இலகுவாக வெளியேற அவனுக்கு வழியை ஏற்படுத்துவான். இழிவு, அழிவு அஞ்சப்படும் சந்தர்ப்பங்களில் அவனுக்கு கண்ணியத்தை வழங்குவான்.

ஒரு தந்தை தன் மகனை பராமரிப்பது போன்று அனைத்து விதங்களிலும் அவனை பராமரித்து பாதுகாப்பவனாக அல்லாஹ் ஆகிவிடுவான். எனவே நமது வேலை ஒன்று மட்டும்தான், அதாவது நாம் பாவங்களில் இருந்து முற்றிலும் விலகி, நன்மைகளை தேர்ந்தெடுத்து முழுக்க நல்லவர்களாக வாழ முற்படவேண்டும். இதற்கு நாம் தயாராகிவிட்டோம் என்றால் அல்லாஹ்வின் திட்டங்கள் அனைத்தும் தாமாகவே நடைமுறைக்கு வந்துவிடும்.

“இறையருள் எவரையாவது தழுவிக் கொண்டால் அவரது கப்பல் ஓரமாகவே நங்கூரமிடும். நடுக்கடலில் அதை தத்தளிக்க ஒருபோதும் அவன் விட்டு விட மாட்டான்” என்பது அனுபவ விதியாகும்.

“நாம் எப்போதும் நல்லவர்களாகுவோமோ அப்போதுதான் அல்லாஹ்வின் அருள் நம்மை அள்ளிக்கொள்ளும்” என்பதை மனதில் பதிய வையுங்கள். “சாலிகீன்” என்ற வார்த்தை நாம் நல்லமல்கள் உடன் கூடிய வாழ்க்கையை தேர்ந்தெடுத்து அதில் பயணித்தால் அல்லாஹ் நம்முடைய அனைத்துக் காரியங்களையும் பூர்த்தி செய்வான் என்பதையே குறிக்கிறது.

يَا ابْنَ آدَم اكْفِنِي أَرْبَعَ رَكَعَاتٍ مِنْ أَوَّلِ النَّهَارِ أَكْفِكَ آخِرَهُ

“ஓ அடியானே நீ பகலின் தொடக்கத்தில் நான்கு ரக்அத்துகள் தொழுது கொள். பகல் முழுக்க உன் வேலைகளுக்கு நான் உதவியாளனாக இருப்பேன்” என்ற கருத்து ஹதீஸ்களில் வந்துள்ளது. இதனால் நமது அனைத்து வேலைகளும் மிக இலகுவாகிவிடும்.

## அல்லாஹ் பொறுப்பெடுத்த அற்புத உதாரணங்கள்

யாரெல்லாம் நல்வாழ்க்கை வாழ்ந்தார்களோ அவர்களுக்கு மறைமுகமாக இறை உதவி மற்றும் மறைவான கரம் ஒன்று எந்நேரமும் உதவிகரமாக இருந்துள்ளது என்பதை சில சம்பவங்கள் வாயிலாக அறிகிறோம். சற்று கவனமாக கேளுங்கள்.

## மரியமின் பொறுப்பாளன் (பருவம் மாறி பழமளித்தவன்)

மர்யம் عليها السلام அவர்கள் உண்மையான இறை அடிமையாக, எந்நேரமும் பைத்துல் முகத்தஸில் வணக்கம் புரியக் கூடிய வணக்கசாலியாக இருந்தார்கள். ஹஜ்ரத் ஜகரிய்யா عليه السلام அவர்கள் தான் வெளிப்படையாக அவர்களை பராமரித்து வந்தார்கள். ஒருமுறை பயணத்திற்கு புறப்பட்டவர்கள் அவசர அவசரமாக வீடு திரும்பினார்கள்.

மர்யமுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு சிரமப்படும் நிலை ஏற்பட்டிருக்கக் கூடாது என்ற கவலையுடன் வீட்டில் நுழைந்தவர்கள் அப்போது அங்கு ஒரு பெரும் அற்புதம்

நடந்திருப்பதைப் பார்த்து வியந்தார்கள். மரியமின் அறைக்குள் அவர்கள் நுழைந்த போது பருவத்திற்கு அப்பாற்பட்ட பழங்கள் இருக்கக் கண்டார்கள்.

மிகுந்த ஆச்சரியப்பட்டு

كُلَّمَا دَخَلَ عَلَيْهَا زَكَرِيا الْمِحْرَابَ وَجَدَ عِنْدَهَا رِزْقًا قَالَ يَا مريم اِنِّيْ لَكَ هَذَا قَالَتْ هُوَ مِنْ عِنْدِ اللّٰهِ

மரியமே இவைகள் எங்கிருந்து கிடைத்தன என்று கேட்டார்கள். இவைகள் அல்லாஹ்வின் புறத்திலிருந்து கிடைத்தன என்றும் அவன் விரும்புபவர்களுக்கு கணக்கின்றியே வழங்குவான் என்றும் பதிலளித்தார்.

அவன் தன் நேசர்களை எவ்வாறெல்லாம் ரகசியமாக பாதுகாக்கிறான் என்பதைப் பாருங்கள்.

## அன்னை ஹாஜராவின் عليها السلام பொறுப்பாளன் (பாலைவனத்தில் பானமளித்தவன்)

இப்ராஹிம் عليه السلام தன் மனைவி ஹாஜர் அவர்களையும், மகன் இஸ்மாயில் عليه السلام அவர்களையும் கஃபாவிற்கு அருகில் தன் வாகனத்திலிருந்து இறக்கி விட்டுவிட்டு அமைதியாக புறப்பட்டார்கள். அந்த இடம் புற்பூண்டுகள் , செடி கொடிகள் இல்லாத வறண்ட பூமியாக இருந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை தண்ணீரோ பசுமையான தாவரங்களோ கிடையாது.

அத்தோடு வெயிலும் உச்சகட்டத்தில் இருந்தது. இச்சந்தர்ப்பத்தில் எங்களை இங்கே ஏன் விட்டு விட்டு செல்கிறீர்? என்று ஹாஜரா عليها السلام கேட்ட போது, இப்ராஹிம் عليه السلام எதுவும் கூறாமல் அமைதியாகச் செல்ல ஆரம்பித்தார்கள்.

இது அல்லாஹ்வின் புறத்திலிருந்து வந்த உத்தரவு என்பதால் அமைதியாக நகர்ந்தார்கள். இரண்டாவது முறையாக கேட்டபோதும் பதிலளிக்கவில்லை. மூன்றாவது முறையில் அன்னை ஹாஜர் அவர்கள் சற்று கேள்வியை மாற்றி தாங்கள் இறை உத்தரவின் படி எங்களை இங்கே விட்டுச் செல்கிறார்களா? என்று கேட்ட போது தான் ஆம் என்பதாக தலையசைத்து பதிலளித்தார்கள்.

நீங்கள் இறை உத்தரவின் படி எங்களை இங்கே விட்டுச் சென்றால்

إِذَا وَ اللّٰهِ لَا يَضِيْعَنَا

அந்த இறைவன் எங்களை வீணாக்க மாட்டான் என்று திடமான நம்பிக்கையுடன் ஹாஜரா ﵍ அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள். ஒரு பெண்ணின் மனோதிடத்தை பாருங்கள். சில நாட்களுக்காவே அவர்கள் வைத்திருந்த பொருட்களும், தண்ணீரும் தீர்ந்துவிட்டன. எனவே அவ்விருவரும் தாகத்தால் தவிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது.

அப்பாலைவனத்தில் போய் எங்கிருந்து தண்ணீர் கொண்டு வர முடியும். தண்ணீருக்காக அன்னை ஹாஜர் ﵍ அவர்கள் ஸஃபா மர்வா மலைகளுக்கு மத்தியில் ஓடினார்கள்.

ஒரு தாயின் இந்த தவிப்பும், தண்ணீருக்காக ஓடிய ஓட்டமும் அல்லாஹ்விற்கு மிகவும் பிடித்து விட்டது. அந்த மைதானத்தில், வறண்ட பாலைவனத்தில் அக்குழந்தையின் பாதத்தில் இருந்து தண்ணீரை அல்லாஹ் ஓடச் செய்தான்.

ஆக அவனே நல்லவர்களின் பொறுப்பாளனாக இருக்கிறான் என்பது உண்மையல்லவா!

# இரண்டு அனாதைகளின் பொறுப்பாளன் (சொத்தைக் காக்க சொந்தங்களை அனுப்பியவன்)

அல்லாஹ் நல்லோர்களின் சந்ததிகளுடனும் நல்ல முறையில் நடந்து கொள்வான். இதற்கும் திருக்குர்ஆனிலே ஆதாரம் உள்ளது.

ஹஜ்ரத் மூஸா ﵇ கிள்ர் ﵇ ஆகிய இருவரும் தங்களது தொலைதூரப் பயணத்தின் வழியில் ஒரு கிராமத்தை அடைந்தார்கள். அந்த கிராமவாசிகள் இவர்கள் இருவருக்கும் அக்கால வழமைப்படி விருந்தளிக்கவில்லை.

ஆனால் ஹிள்ர் ﵇ அதைப்பற்றி எல்லாம் கண்டு கொள்ளாமல் அங்கிருந்த ஒரு வீட்டின் விழத் தயாராக இருந்த சுவர் ஒன்றை எக்கூலியும் பேசாமல் சரிசெய்து கட்ட ஆரம்பித்தார்கள். அது பற்றி மூஸா ﵇ அவர்கள்

قَالَ لَوْ شِئْتَ اتَّخَذَتْ عَلَيْهِ اَجْرًا

நம்மோடு கடுமையாக நடந்து கொண்டு, உணவு பற்றி கூட கேட்காத இந்த மக்களிடத்திலா உபகாரத்தோடு நடந்து கொள்வது என்று கேட்டார்கள்.

அதற்கு ஹஜ்ரத் ஹிள்ர் ﵇ அவர்கள் இந்த சுவருள்ள இடம் இரண்டு அனாதை சிறுவர்களுக்குச் சொந்தமானது. இவர்களின் பெற்றோர் நல்லவர்களாக இருந்தனர். தன் பிள்ளைகளுக்கு உரிய நேரத்தில் பயன்பட தங்கள் சொத்துக்களை இச்சுவரின் கீழ் புதைத்து வைத்துள்ளனர்.

كَانَ تَحْتَهُمَا كَنْزٌ لَهُمَا وَ كَانَ اَبُوْهُمَا صَالِحًا

நாம் அவர்களின் சொத்துக்களை பாதுகாப்போம் என்ற இறைவாக்கின் வெளிப்பாடு தான் இது. இவ்வாறுதான் அல்லாஹ் நல்லடியார்களின் சந்ததிகளையும் குறிப்பான கவனிப்போடு பராமரிப்பான். நமக்கும், நம் சந்ததிகளுக்கும் அல்லாஹ்வுடைய மறைவான பாதுகாப்பு கிடைக்க வேண்டு மென்று விரும்பினால், அனைத்து பாவங்களிலிருந்தும் நம்மை விடுவித்து , நல்லமல்களில் நம்மை இணைத்துக் கொள்வதைத் தவிர வேறு வழி கிடையாது.

பனூ இஸ்ரவேலர்களுக்கு சுமார் நாற்பது வருடங்களாக மன்னு சல்வா என்ற சுவன உணவை வானிலிருந்து இறக்க ஆற்றல் கொண்ட அல்லாஹ் இறுதித் தூதரின் பிரியமான இந்த சமூகத்திற்கு தன் கருவூலத்திலிருந்து உணவளிக்காமல் விட்டுவிடுவானா என்ன? உண்மையில் நம் தரப்பில் தான் குறை உள்ளது. நாம் நம்மை இறை பொறுப்பின் கீழ் ஆக்கிக் கொள்ளத் தயாராகவில்லை என்பதே நிஜம்.

ஒரு மாணவன் கல்லூரியில் சேர்ந்து விட்டாலே போதும், அவனுடைய உணவு கல்லூரியின் தரப்பிலிருந்து முடிவாகி விடுகிறது. இதற்கு மாறாக ஒருவன் கல்லூரியில் சேராமல், தெருவில் உலாவிக் கொண்டிருந்தால் அவனுடைய உணவிற்கு கல்லூரி எப்படி பொறுப்பாகும்? இது போன்றுதான் நம் நிலையும்.

நாம் அல்லாஹ்வின் நல்லடியார்களில் நம்மை இணைத்துக் கொள்ளாமல், மனம் விரும்பும் வித விதமான, சுவையான உணவுகளை உண்டு கொண்டு, மனம் விரும்புவதை பூர்த்தி செய்துகொண்டு, ஷரீயத்தின் உத்தரவை ஓரம் கட்டிவிட்டு, மனதில தோன்றியவாறு கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று வாழ்ந்து கொண்டு இருந்தால்,

எப்படி அல்லாஹ்வின் பொறுப்பும், பாதுகாப்பும் நமக்கு கிடைக்கும் என்று சற்று யோசிக்க வேண்டும். இதனாலேயே நல்லோர்களின் பட்டியலிலிருந்து நமது பெயர் நீக்கப்பட்டிருக்கலாம் என்பதை யார் அறிவார்?

சற்று யோசியுங்கள் ஒரு சிலவினாடி அற்ப இன்பத்திற்காக இறை நல்லடியார்களின் குழுவிலிருந்து நமது பெயரை நீக்கி கொள்வது எவ்வளவு பெரிய நஷ்டமாகும். ஒரு வினாடி குற்றம் செய்து பல நூறு ஆண்டுகள் தண்டனை அனுபவிக்க தயாராகுதல் என்ன அறிவுடமையா? இறை நல்லடியார்களுடன் நம்மை சேர்த்துக் கொள்வது மட்டுமே நமது வேலையாகும். நாம் அவனோடு இணைந்தவுடன், அவன் நமக்கு மறைமுக உதவிகள் புரிய ஆரம்பித்து விடுவான். நமது அனைத்து வேலைகளையும் நடத்தி வைப்பான்.

நான் தற்போது சில சம்பவங்களை உங்களுக்கு கூறுகிறேன். அதன் மூலம் தன் பொறுப்பில் உள்ளவர்களின் காரியங்களை எவ்வளவு கச்சிதமாக அல்லாஹ் முடித்து வைக்கிறான் என்பதை புரிந்து கொள்ள முடியும், எப்படியெல்லாம் உதவி செய்கிறான் என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

## உமர் இப்னு அப்துல் அஜீஸ் ﵀ அவர்களின் பிள்ளைகளின் பொறுப்பாளன்.

## (பதினோரு மகன்களும் கவர்னர்களாக...)

உமர் இப்னு அப்துல் அஜீஸ் ﵀ என்ற நீதமான ஒரு மன்னர் வாழ்ந்தார். அல்லாஹ் அன்னாருக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கியிருந்தான். நேரான பாதையில் தன்னை நிலை நிறுத்தினார்கள். மிக எளிமையான

வாழ்வினால் தன் இறைவனின் திருப்தியைப் பெற முயன்று வந்தார்கள். அன்னாரின் மரண நேரம் நெருங்கிய போது அவர்களுடைய ஒரு நெருங்கிய தோழர் வந்து நீங்கள் உங்கள் பிள்ளைகளுடன் முறையாக நடந்துக் கொள்ளவில்லை, மிக அநீதம் இழைத்துவிட்டீர்கள் என்றார். ஏன் இவ்வாறு கூறுகிறீர் என்று கேட்டார்கள்?

உங்களுக்கு முன் சென்ற ஆட்சியாளர்களைப் பாருங்கள், அவர்கள் இறக்கும் போது தங்கள் பிள்ளைகளுக்கு எவ்வளவோ சொத்து, செல்வங்கள், விளைச்சல் நிலங்களையெல்லாம் விட்டுச் சென்றுள்ளார்கள். அதனால் அவர்களின் பிள்ளைகள் எல்லாம் இன்று செழிப்பான, சந்தோசமான வாழ்வு வாழ்கின்றனர். ஆனால் நீங்களோ உங்கள் பிள்ளைகளுக்கு எதையும் விட்டு வைக்காமல் செல்கிறீர்களே! என்று கூறியபோது, இதைக் கேட்ட உமர் இப்னு அப்துல் அஜீஸ் ﵀ அவர்கள் எழுந்து அமர்ந்தார்கள். நான் கூறுவதை நன்கு புரிந்து கொள்ளுங்கள்!

நான் என் பிள்ளைகளுக்கு நல்லொழுக்கம் கற்பித்து, நல்லறங்களை பயிற்றுவித்து, நல்வழியில் விட்டுச் செல்கிறேன். அல்லாஹ்வின் வாக்குறுதியான

وَ هُوَ يَتَوَلَّي الصَّالِحِيْنِ

“அவனே நல்லோர்களின் பொறுப்பாளன்” என்ற வாசகத்திற்கு ஏற்ப அவனே பொறுப்பாளனாக பாதுகாத்துக் கொள்வான்.

அவ்வகையில் நான் என் பிள்ளைகளை அல்லாஹ்வின் பொறுப்பில் விட்டுச் செல்கிறேன் . ஒருவேளை அவர்கள் நல்லவர்களாக உருவாகாமல், தீயவர்களாக வளர்ந்திருந்தால் அவர்கள் செய்யும் தீமைகளுக்கு நான் உதவியாளனாக

ஆக மாட்டேனல்லவா. இதைக் கூறிவிட்டு உமர் பின் அப்துல் அஜீஸ் ﵀ அவர்கள் மரணித்து விட்டார்கள்.

அவர்களுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த கலீபாவுக்கு நல்ல பக்குவம் உள்ளவர்களை தன் நாட்டில் கவர்னர்களாக நியமிக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. அவருக்கு நாடு முழுக்கத் தேடியதில் அப்துல் அஜீஸ் ﵀ அவர்களின் பிள்ளைகளை விட அதிகம் கற்றறிந்த, ஒழுக்கமுள்ள வேறு நபர்கள் கிடைக்கவே இல்லை. எனவே ஒருவர் பின் ஒருவராக அன்னாரின் பிள்ளைகளை பல இடங்களுக்கு கவர்னர்களாக நியமித்தார்.

ஒரு மகான் கூறினார்கள் முன்னாள் ஆட்சியாளர்கள் அனைவரும் தங்கள் பிள்ளைகளுக்கு சொத்து செல்வங்களை விட்டுச் சென்றனர். அவர்களின் பிள்ளைகளுக்கு அவர்களின் மூதாதையர்கள் விட்டுச் சென்ற செல்வங்கள் அனைத்தும் அழிந்து விடும் அளவிற்கு சிரமங்களும், நெருக்கடிகளும் ஏற்பட்டன. அப்பிள்ளைகளில் சிலரை ஜூம்மா பள்ளிகளில் நின்று யாசகம் கேட்பவர்களாக நான் பார்த்துள்ளேன்.

அதே நேரத்தில் உமர் இப்னு அப்துல் அஜீஸ் ﵀ அவர்களின் பிள்ளைகள் அனைவரும் தனித்தனி மாகாணங்களில் பொறுப்பாளர்களாக இருந்தார்கள். சற்று யோசியுங்கள், எண்ணிலடங்கா சொத்து செல்வங்களை விட்டுச் சென்றவர்களின் பிள்ளைகளுக்கு அனைத்தையும் இழந்து யாசகம் கேட்கும் அளவு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. பிள்ளைகளுக்கு, எதையுமே விட்டுச் செல்லாமல் நல்லவர்களாக்கிய நபரின் பதினோரு பிள்ளைகளும் ஒரே நேரத்தில் பதினோறு தனித்தனி மாகாணங்களின் பொறுப்பாளர்களாக ஆக்கப்பட்டுள்ளனர்

என்றால் இறைப்பொறுப்பின் மகத்துவத்தை புரிந்து கொள்ளலாம்.

ஆனால் இக்காலத்தில் வாழும் மக்கள் தன் பிள்ளைகளுக்கு பிளாட்டுகள் வாங்கவேண்டும், கம்பெனிகள், கடைகள் வைத்து தர வேண்டும் என்ற சிந்தனையிலேயே உழன்று கொண்டிருக்கிறார்கள்.

இவை அனைத்தும் மண் மாளிகையாகும். இடிந்துவிழ அதிக நேரம் ஆகாது. இவை சிலந்தி வலையாகும், கலைந்து போக நீண்ட காலம் ஆகாது.

எனவே பிள்ளைகளின் நிம்மதிக்கான நிரந்தர ஏற்பாடு என்பது அவர்களை நல்லவர்களாக ஆக்கி இறைப் பொறுப்பில் விட்டுச் செல்வதாகும். அவர்களுக்கு அல்லாஹ்வை விட சிறந்த பாதுகாவலன் வேறு யார் இருக்கமுடியும்? அவர்களின் வாழ்வை அல்லாஹ் எதிர்காலத்தில் கண்ணியத்தால் அலங்கரித்து விடுவான்.

## ஒரு பரிபூரண இறைநேசரின் பொறுப்பாளன் (அள்ள அள்ள அமுத சுரபியாய் தானியக் கருவூலம்)

நம்முடைய ஆன்மீக வழித்தொடரில் ஹாஜி அப்துல் மாலிக் குரைஷி ﵀ என்றொரு மகான் இருந்தார்கள். ஒரு முறை மிஸ்கின்பூரிலுள்ள ஒரு மஸ்ஜிதில் அன்னாரை சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்போது என் வாழ்வில் நிகழ்ந்த ஒரு நிகழ்வை நான் உன்னிடம் கூறுகிறேன் என்றார்கள். நான் மிகுந்த ஆவலோடு அவசியம் கூறுங்கள் என்றேன்.

என்னுடைய ஷேக் அவர்கள் எனக்கு சீர்திருத்த பணிக்கு அனுமதியும், பொறுப்பும் வழங்கிய போது

நான் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியவனாக இருந்தேன். ஆனால் எனது பெற்றோர் எனக்கு விரைவாக திருமணம் முடித்து வைத்துவிட்டார்கள். நானும் என் மனைவியும் மிக வறுமையில் வாழ்வை கழித்துவந்தோம். நான் என் ஷேகிடம் எனக்கு பொருளாதார அபிவிருத்திக்காக துஆ செய்யுங்கள் என்றேன்.

அதற்கு

وَ اللّٰهُ مَعَ الصّٰبِرِيْنِ

"அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்" என்று எனக்கு ஆறுதல் கூறினார்கள்.

ஒரு தடவை சிறிய சாக்குப் பையில் எனக்கு கொஞ்சம் கோதுமையை ஒரு பணிவிடையாளரின் மூலம் கொடுத்து அனுப்பினார்கள். அதில் தோராயமாக பத்து கிலோ அளவு கோதுமை இருந்தது. அத்துடன் ஒரு துண்டு காகிதத்தையும் கொடுத்து அனுப்பினார்கள்.

அதில் அப்துல்மாலிக்! இந்த கோதுமையை ஒரு பாத்திரத்தில் போட்டு மூடி வைத்து விடவும். அதனுடன் இந்தத் துண்டு காகிதத்தையும் போட்டு விடவும். பிறகு அப்பாத்திரத்திலிருந்து ஓரமாக திறந்து எடுத்து பயன்படுத்தவும். அந்தத் துண்டுக் காகிதத்தில்

وَ اللّٰهُ مَعَ الصّٰبِرِيْنِ

"அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்" என்று எழுதப்பட்டிருந்தது. நான் என் ஷேகின் வழிகாட்டுதலுக்கேற்ப செயல்பட்டு வருகிறேன்.

நான் இப்போது தொழுது முடித்து பள்ளியில்

அமர்ந்துள்ளேன். அத்துடன் ஒழுவுடன் உள்ளேன். அல்லாஹ்வின் வீட்டில் அமர்ந்து கூறுகிறேன் "நான் அந்த கோதுமையிலிருந்த சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தி வருகிறேன். இதுவரை அது காலியாகவே இல்லை" என்றார்கள்.

وَ اللّٰهُ مَعَ الصَّابِرِيْنِ

"அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்". மேலும் அவர்களின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்கிறான். கண்ணியம் என்ற கிரீடத்தை அணிவித்து, வெற்றி எனும் மாலையை சூட்டுகிறான். அவர்கள் சுயமாக எதையும் செய்யத் தேவையில்லை, தானாக அனைத்தும் நடப்பது போன்று இறைவன் தரப்பிலிருந்து ஏற்பாடுகள் செய்யப்படும்.

இது அவனுடைய அடியார்களில் நல்லோர்களுக்காக இவ்வுலகில் அவன் செய்யும் சன்மானங்களாகும். இன்னும் மறுமையில் பன்மடங்கு சந்தோசமான வாழ்வு உள்ளது.

## முர்ஷிதே ஆலம் ﵀ அவர்களுடைய ஒரு பணியாளரின் பொறுப்பாளன்.

## (ஒன்பதுக்கு ஒன்பது ஒரே நேரத்தில்...)

நம்முடைய ஒரு நண்பர் இருந்தார். அவர் என்னுடைய ஷேக் அவர்களுக்கு முக்கிய சேவகராக இருந்தார். அவர் மதினாவில் வசித்து வந்தார். அல்லாஹ் அவருக்கு அதிகமான பிள்ளைகளை கொடுத்திருந்தான். அவருக்கு ஒன்பது ஆண் மக்களும் இன்னும் சில பெண் பிள்ளைகளும் இருந்தனர்.

அந்த பிள்ளைகள் அனைவரையும் குர்ஆனை மனனம் செய்த ஹாபிள்களாக, மார்க்க அறிஞர்களாக ஆக்கி நல்வழியில் வாழ வைக்க மிகுந்த முயற்சி மேற்கொண்டு வந்தார். எனது ஷேக் அவர்களுக்கு நெருங்கியவராகவும், உறவுக்காரராகவும் இருந்தார்.

முர்ஷிதே ஆலம் ﵀ அவர்கள் இவ்வுலகை விட்டுச் சென்ற பிறகு சிலவருடங்கள் கழித்து நான் பள்ளியில் அமர்ந்திருந்தபோது அவர் தன் முகத்தில் கவலையின் அடையாளங்கள் தெரிந்தவாறு என்னிடம் வந்தார். நான் அவரிடம் என்ன காரி ஷாஹிப் உடல் நலம் தானே! என்று விசாரித்தேன்.

அதற்கு நான் இன்று மிக வருத்தமாக உள்ளேன் என்றார். ஏன் என்று கேட்டதற்கு என்னுடைய மூத்த மகன் முஃப்தியாகிவிட்டார். மேலும் திருமணத்திற்கு தகுதிவுடையவராக ஆகிவிட்டார். எங்களுடைய பெரிய குடும்பத்திற்கு போதாத இரண்டு அறைகள் கொண்ட ஒரு சிறிய வீடு தான் தற்போது எங்கள் வசம் உள்ளது. இவருக்கு திருமணம் முடிந்தால் மனைவியோடு இவரைத் தங்க வைப்பதற்கு மூன்றாவது அறை அதில் இல்லை.

அதோடு சவுதியில் பெண்வீட்டாரை விட ஆண்வீட்டாருக்கே திருமணச் செலவு அதிகம் ஏற்படும். நம்முடைய நாட்டிலோ பெண் வீட்டாரே வரதட்சனை மற்றும் இன்னபிற செலவினங்கள் செய்யும் பழக்கம் உள்ளது. அதனால் நம் நாடுகளில் பெண் பிள்ளை பிறந்தால் சுமையாகக் கருதும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் இங்கு வழமை தலைகீழாக உள்ளது.

இங்கே பெண் வீட்டாருக்கு எந்த செலவும் கிடையாது. அனைத்து செலவினங்களும் ஆண் வீட்டாரையே

சார்ந்ததாகும். எனவே என்னால் இங்கே திருமணச் செலவுகளை சமாளிக்க முடியாமல் போகலாம். என் வருமானத்தில் வெறும் ரொட்டி, பருப்பு மட்டுமே சமைத்து தர இயலும். அதைவிட அதிகமாக எதுவும் செய்ய இயலாது. எனவே என்ன செய்வதென்றே எனக்கே புரியவில்லை என்று புலம்பினார்.

அத்தோடு இன்று என்னுடைய நண்பர் ஒருவர் வந்து என்னிடம் சற்று கடுமையாக பேசிவிட்டார். நீ உன்னை பெரிய மௌலவி என்று கூறித்திரிகிறாய்? நீ என்ன செய்வாய்? நீ என்ன சிரமப்பட போகிறாயோ தெரியவில்லை. உன் இரண்டு பிள்ளைகளை பரக்கத்திற்காக மவ்லவிகள் ஆக்கிவிட்டு, மீதமுள்ளவர்களை இஞ்ஜினியராக, மருத்துவராக, வியாபாரியாக ஆக்கியிருந்தால் இன்று உன்னுடன் சேர்ந்து குடும்ப சுமையை சுமக்க முன்வந்திருப்பார்கள். நீ நிம்மதியாக இருந்திருக்கலாம்.

மாறாக நீ அனைவரையும் ஆலிம்களாக்கி எவ்வளவு முட்டாள்தனமான வேலை செய்துவிட்டாய்? இப்போது இவர்கள் சுயதொழில் கூட செய்யத் தெரியாதவர்களாக, தானும் சம்பாதிக்காமல், உனக்கும் சம்பாதித்து தராமல் உள்ளனர். இப்போது அமர்ந்து யோசித்து என்ன பலன்? இது போன்ற கடினமான பல வார்த்தைகளை கூறிச்சென்றார். அவர் என்னுடைய பாலிய சினேகிதர். நான் ஏதோ பெரிய பாவத்தை செய்து விட்டதைப் போல் என்னை குறைகூறி மனதை உடைத்துவிட்டார்.

இறுதியில் அவர், இப்போது உன் மகன்களுக்கு பெண் தேடுகிறாயல்லவா! தலைகீழ் நின்றாலும் பெண் கிடைக்கிறதா என்று பார்ப்போம் என்றார். நான் இன்னும் அதிகம் மனமுடைந்து போனேன். எனவே தங்களிடம்

துஆ செய்ய கோரிக்கை வைக்கும் நோக்கில் வந்துள்ளேன் என்றார்.

நாங்கள் நபி ﷺ அவர்களின் சன்னிதானத்தில் சலாம் கூற மதீனா சென்று கொண்டிருக்கின்றோம். நம்முடன் வாருங்கள் அங்கே சென்று துஆ செய்வோம் என்று அவரிடம் கூறினேன். அவ்வாறே நபி ﷺ அவர்களின் சன்னிதானத்தில் சலாம் கூறி துஆ செய்தேன்.

மறுநாள் இஷா தொழுகைக்கு பிறகு மஸ்ஜிதுன் நபவியில் அமர்ந்திருந்த போது அந்த காரி சாஹிப் அவர்கள் மிக சந்தோஷமாக கையில் இனிப்பு பொருட்களுடன் விரைந்து வந்தார். நானும் அவரின் சந்தோசமான வருகையைப் பார்த்து சந்தோஷமானேன். ஏனெனில் நாங்கள் ஒரு வீட்டில் பெண் கேட்க செல்கிறோம், துஆ செய்யுங்கள். அங்கு பெண் அமைந்திட வேண்டும் என்று நேற்றுதான் சொல்லிச் சென்றார்.

அவர் அருகில் வந்ததும் என்ன காரி சாஹிப் அவர்களே என்ன ஆயிற்று? என்று கேட்டேன். அவர் அல்லாஹ்வின் வியப்பான அருள் வெளிப்பட்டது என்றார். என்ன நடந்தது? என்று கேட்டேன். அதற்கவர் பாகிஸ்தானை சேர்ந்த ஒரு எஞ்சினியர் குடும்பம் இருப்பதாக தகவல் கிடைத்தது. சில நாட்களுக்கு முன் நடந்த விபத்தில் அந்த இஞ்ஜினியர் மரணித்து விட்டார். அவருடைய மகள் ஒருவர் நன்கு படித்த, நல்ல குணமுள்ள பெண் என்று கேள்விப்பட்டோம்.

எனக்கு இது பற்றிய விபரம் தெரிந்த போது என் மனைவியை அழைத்துக் கொண்டு அவர் வீட்டுக்குச் சென்றேன். எஞ்ஜினீயரின் மனைவியை என் மனைவி

நேரில் சந்தித்துப் பேசினாள். இரண்டு நிமிடத்திற்கு பிறகு நான் உங்களிடம் தனியாக பேசவேண்டும் என்று அப்பெண் சொல்லி அழைத்தாள். எனக்கு மனதில் வழமைபோல் என் மனைவியிடம் எதையாவது கூறி தட்டிக் கழித்து விடப் போகிறாள் என்று எண்ணி படபடப்பு வர ஆரம்பித்து விட்டது.

பிறகு நான் என் மனைவியிடம் என்ன ஆனது? என்று கேட்டேன். அவள் பெருமூச்சுவிட்டாளாக முடிவாகிவிட்டது முடிவாகி விட்டது என்று கூறினாள். என்ன முடிவாயிற்று என்று கேட்டேன்? எல்லாம் முடிவாகி விட்டது என்று கூறினாள். அவள் இயல்பு நிலைக்கு வந்த சிறிது நேரத்தில், இவ்வளவு அழகான பெண்ணாக இருப்பாள் என்று நான் கற்பனையில் கூட எண்ண வில்லை என்றாள்.

நான் அவளுடைய தாயிடம் பேசியபோது என் கணவர் மார்க்கப்பற்றுள்ளவராக இருந்தார். அவர் இறக்கும் முன் என்னை அழைத்து என் அனைத்துப் பிள்ளைகளுக்கும் ஆலிம்களையே மணமகன்களாக தேர்ந்தெடுத்து மணமுடித்துக் கொடுக்க வேண்டும் என்று என்னிடம் வசிய்யத் செய்திருந்தார். எனவே நான் உங்கள் ஆலிமான மகனுக்கு மணமுடித்துத் தர சம்மதிக்கிறேன் என்று கூறினாள்.

மீண்டும் என் மனைவி நான் உங்களுக்கு மற்றொரு விஷயத்தையும் கூறவா என்று சொல்லி விட்டு அமைதியாகி விட்டாள். என்னை புதிரில் சிக்க வைத்துவிட்டாள், என்ன விஷயம் சொல் என்று கூறினேன். அவள் அல்லாஹ்வுக்கே எல்லா புகழும் என்று கூறிவிட்டு நமக்கு ஒன்பது ஆண் பிள்ளைகள் உள்ளனர். அவர்கள் வீட்டில் ஒன்பது பெண் பிள்ளைகள் உள்ளனர்.

ஒவ்வொரு பிள்ளைகளும் நம் மகன்களை விட இரண்டு வயது இளையவர்கள். நாங்கள் இருவரும் சேர்ந்து அந்த ஒன்பது பிள்ளைகளுக்கும் சேர்த்தே திருமண ஒப்புதல் தெரிவித்து விட்டோம். அவர்களது மூத்த பிள்ளை தற்போது பெரியவளாகிவிட்டாள். ஆரம்பமாக நமது மூத்த மகனுக்கு அவளைத் திருமணம் முடித்து விடலாம்.

பிறகு அடுத்த பெண் வயதிற்கு வந்தால் அடுத்த மகனுக்கு முடிக்கலாம் என்று சில வினாடியில் ஒன்பது மகன்களுக்கும் பெண் பேசிவிட்டு வந்து விட்டேன் என்று கூறினாள். அவனே நல்லோர்களின் பொறுப்பாளன் ஆவான்.

எவருடைய வீட்டிலாவது ஒரே ஒரு பெண்பிள்ளை இருந்து அவளுக்கு பொருத்தமான வரன் அமையவில்லை எனில் அவளது பெற்றோரின் மனதில் எந்த அளவு கவலை ஏற்படும் என்பதை பெற்றோர்களால் மட்டுமே அறியமுடியும். இதை நினைத்து நினைத்து அழுது புலம்புவார்கள். சதா காலமும் நிம்மதி இழந்து துடிப்பார்கள்.

பல மகான்களிடம் சென்று ஹஜ்ரத்! இவள் எங்களுடைய மகளாவாள். இவளை நாங்களாக எங்காவது கொண்டு போய் விட்டு விட்டு வரவா முடியும்? என்ன செய்வது, எந்த பொருத்தமான இடமும் இவளை திருமணம் முடித்துக் கொடுக்க அமையவில்லை. யாராவது பெண் கேட்டு வந்தால் தானே நாங்கள் திருமணம் செய்து வைத்து இவளை அனுப்பி வைக்க முடியும் என்று புலம்புவார்கள்.

ஒரு பிள்ளைக்கு மாப்பிள்ளை அமைவதே இவ்வளவு சிரமமாக இருக்கும் போது, ஒன்பது பிள்ளைகளுக்கும் ஒரே நேரத்தில் அமைவதென்பது அல்லாஹ்வுடைய

பேரருளே அன்றி வேறில்லை. அல்லாஹ்வின் உதவி வந்துவிட்டால் சில வினாடிகளில் அனைத்து காரியங்களும் கைகூடிவிடும்.

## ஒரு மார்க்க அறிஞரின் பொறுப்பாளன் (தாடி உள்ளவர்களுக்கே சாதகமானவன்...)

ஜெர்மனியில் ஹம்பர்க் என்ற ஒரு நகரம் உள்ளது. அங்குதான் முதன் முதலாக குர்ஆன் அச்சடிக்கப்பட்டது. மற்றொன்று ரஷ்யாவில் உள்ள செயின்ட் பீட்டர்பர்க்கிலும் அச்சகங்கள் அமையப்பெற்ற காலத்தில் ஆரம்பமாக இங்கிருந்தும் குர்ஆன் அச்சடிக்கப்பட்டது. ஒரு முறை நான் ஹம்பர்க் சென்றிருந்தேன்.அங்கு ஒரு உரை நிகழ்த்தினேன். என்னுடைய உரைக்குப் பிறகு பாகிஸ்தானை சேர்ந்த ஒரு எஞ்சினியர் என்னை சந்திக்க வந்தார்.

அவர் பார்ப்பதற்கு மிக அழகானவராக இருந்தார். நடை, உடை, தோற்றங்கள் மிக ஈர்ப்பாக, அழகிய நிறத்தில், நல்ல கம்பீரமானவராக இருந்தார். அவர் என்னிடம் வந்து நான் ஒரு விஷயத்தை உங்களிடத்தில் கூற விரும்புகிறேன் என்றார். என்ன விஷயம் அவசியம் கூறுங்கள் என்றேன். அவர் "தாடி உள்ளவர்களுக்கும் மௌலவிகளுக்கும் அல்லாஹ் மிக சாதகமாகவே செயல்படுகிறான்" என்றார். நீங்கள் சொல்வது சரியானதே! நீங்கள் எவ்வாறு இதை அறிந்தீர்கள் என்று கேட்டேன்.

எனக்கு நடந்த ஒரு சம்பவத்தை வேறு யாருடனும் நான் கூற இயலாது. ஆனால் உங்களிடம் கட்டாயம் அதை சொல்வேன் என்றார். சரி சொல்லுங்கள் என்றேன். அவர் தன்னுடைய அனுபவத்தைக் கூறத் தொடங்கினார். நான் இங்கு அதிகம் சம்பளம் வாங்கும் பாகிஸ்தானை சேர்ந்த

எஞ்சினியர் ஆவேன். நான் வேலை செய்யும் நிறுவனத்தில் ஒரு எஞ்ஜினீயரான ஜெர்மனியப் பெண்ணும் வேலை செய்கிறாள். அவள் மிக அழகானவள், சக நண்பர்கள் அவளை அழகு தேவதை என்றே அழைப்பார்கள்.

அவளும் இங்கு இன்ஜினியராக பணிபுரிகிறாள். அவள் மிக புத்திசாலியானவள். எவரும் பணியைத் தவிர வேறு விஷயத்தை பேசவோ, ஒரு விஷயத்திலிருந்து சம்பந்தமில்லாத வேறு விஷயத்தின் பால் பேச்சை இழுக்கவோ அவள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டாள். நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து வாலிபர்களும் அவளை திருமணம் செய்து கொள்ள ஆசைப்பட்டனர். ஒவ்வொருவரும் வெவ்வேறு வழிகளில் அதற்கான முயற்சி செய்து கொண்டிருந்தனர்.

ஆனால் அவள் எவர் பிடியிலும் சிக்காமல் தவிர்த்து தப்பித்து வந்தாள். யாரையும் தன்னுடன் பேச அனுமதிக்காத அளவு மிக விழிப்புணர்வாகவே இருந்தாள். வாலிபர்கள் ஒன்றாக அமர்ந்தாலே, எதேச்சையாக இவள் யாருக்குக் கிடைப்பாளோ! இவளை அடையும் அந்த பாக்கியசாலி யாரோ! என்பதாக, இவள் சம்பந்தமான பேச்சாகத்தான் இருக்கும்.

ஒரு நாள் மதிய வேளை உணவுக்கான இடைவெளியாக இருந்தது. எல்லோரும் உணவு உண்ணும் அறையில் அமர்ந்து உணவு உண்டு கொண்டிருந்தனர். நான் மட்டும் சாப்பிடாமல் தனியே அமர்ந்து இருந்தேன். சாப்பிட்டு எழுந்த அவள் என்னை கடந்து செல்லும் போது ஜீ! நீங்கள் சாப்பிடவில்லையா? என்று கேட்டாள். நான் இன்று உணவு உண்ண மாட்டேன் என்றேன். ஏன் உடல்நிலை சுகம்தானே? என்று கேட்டாள்.

அதற்கு நான் எங்களுக்கு (ரமலான்) நோன்பின் மாதம் தொடங்கி விட்டது. எனவே நான் இன்றிலிருந்து நோன்பு வைக்கிறேன். அதனால் எதையும் சாப்பிடக்கூடாது என்றேன். அதற்கு அவள் ரமலான் என்றால் என்ன என்று கேட்டாள். நான் அவளுக்கு ரமலான் சம்பந்தமாகவும், அம்மாதத்தில் நோற்கப்படும் நோன்பு பற்றியும் சிறிது விளக்கம் தந்தேன். என் விளக்கம் அவளுக்கு மிகப்பிடித்திருந்தது.

எனவே மறுநாளும் அதே நேரத்தில் நோன்பைப் பற்றி மேலதிகமான விளக்கத்தைக் கேட்டாள். எனக்கு அவளுடன் பேச சந்தர்ப்பம் கிடைத்து விட்டது என்று எண்ணி இந்த வாய்ப்பை நான் நழுவ விடக்கூடாது என்று இழுத்துக் கொண்டே சென்றேன். நோன்பு சம்பந்தமாக எனக்கு தெரிந்த முன்பு நான் கேட்டிருந்த அனைத்து விஷயங்கள், சட்டங்களை கூற ஆரம்பித்தேன். பல நாட்களாக இதே தலைப்பில் எங்களது பேச்சு சென்று கொண்டிருந்தது.

ஒருநாள் அவள் “உங்களது மார்க்கத்தை கற்றறிந்த அறிஞர்கள் யாராவது இருந்தால் சொல்லவும். நான் இன்னும் பல சட்டங்களைப் பற்றி தெளிவு பெற வேண்டி உள்ளது என்றாள். நான் அங்கிருந்த இஸ்லாமிக் சென்டரின் அட்ரஸைக் கொடுத்து அங்கு ஒரு ஆலிம் இருப்பார்.

அவரிடம் உன் சந்தேகங்களை கேட்டுக் கொள். அவர் அனைத்திற்கும் பதில் அளிப்பார் என்று கூறினேன். அவள் அந்த இமாமிடம் தொடர்பு கொண்டு பேசினாள். அவ்விருவருக்கும் இடையில் தனிப்பட்ட அறிமுகம் ஏற்படும் அளவு அவரிடமிருந்து அதிகம் பயன் அடைந்து கொண்டாள். சில நாட்களுக்கு பின் தன் தலையை

மறைத்தவாறு முக்காடு அணிந்து அலுவலகம் வந்தாள். நாங்கள் அனைவரும் வியந்து விட்டோம். என்ன ஆயிற்று? என்ன நடந்தது? என்று கேட்டேன். நான் முஸ்லிமாகி விட்டேன். அந்த இமாமின் முன்னிலையில் கலிமாவை கூறி முஸ்லிமாகி விட்டேன் என்றாள்.

இதைக் கேட்டு மற்றவர்கள் பெரும் திகைப்பில் ஆழ்ந்து விட்டார்கள். ஆனால் நான் மட்டும் மகிழ்ச்சியாக இருந்தேன். ஏனெனில் இந்த நிறுவனத்தில் நான் மட்டுமே முஸ்லிம். எனவே என் நோக்கம் பூர்த்தியாகிவிடும். இவள் திருமணம் செய்வதாக இருந்தால் என்னை மட்டுமே தேர்ந்தெடுக்க முடியும் என்ற சிந்தனையில் இருந்தேன். நான் அன்றைய தினம் போட்டியில் வெற்றி பெற்றவனாக என்னைப் பற்றி உணர்ந்தேன். மற்றவர்கள் இவன் நம்மை தோற்கடித்து விட்டான் என்று ஏகத்துடன் பார்க்கலானார்கள்.

நான் அவளுக்கு என் தாய், தந்தை என் ஆசிரியர்களிடம் முன்பு செவியுற்ற இஸ்லாம் சம்பந்தப்பட்ட அனைத்துக் கருத்துக்களையும் வெளிப்படையாக பேச ஆரம்பித்தேன். அவளும் என் கருத்தை வெகுவாக விரும்பி செவியுற்றாள். இவ்வாறே நாட்கள் கழிந்து கொண்டிருந்த நிலையில் எங்களுக்கு விடுமுறை காலம் வந்தது. முதலில் அவள் டிசம்பருடைய விடுமுறை காலங்களில் கடற்கரை ஏரியாக்களுக்கு செல்லத் திட்டமிட்டு இருந்தாள்.

நான் அவளிடம் நீ முஸ்லிமாகி விட்டு எவ்வாறு அங்கு செல்வாய் என்று கேட்டேன். அதற்கு அவள் எனக்கும் செல்ல மனமில்லை தான், என்றாலும் நான் வெறுமனே என்ன செய்வது என்றாள். சற்று நேரம் யோசித்துவிட்டு அப்படியென்றால், நான் துருக்கி செல்கிறேன். அது

இஸ்லாமிய நாடாக இருப்பதால் இஸ்லாத்தைப் பற்றி தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும் என்றாள். துருக்கியில் என்ன இருக்கிறது? இஸ்லாம் என்றாலே பாகிஸ்தான் தான் நினைவுக்கு வரும்.

அந்தளவு பாகிஸ்தானில் தான் பரிபூரண இஸ்லாம் மக்களின் வாழ்க்கையில் உள்ளது. எனவே என்னுடன் பாகிஸ்தான் வா! அங்கு பரிபூரண இஸ்லாமிய சூழலைக் காண்பாய். அங்கே நிறைய மார்க்கறிஞர்களும், எண்ணிலடங்கா இஸ்லாமிய புத்தகங்களும், பாடசாலைகளும் இருக்கின்றன. அங்கு இஸ்லாம் சார்ந்த அனைத்துமே காணக்கிடைக்கும். என் மனதிற்குள் ஒரு முறையாவது இவள் பாகிஸ்தான் வந்துவிட வேண்டும், இந்த கிளி என் கூண்டிற்குள் அகப்பட்டு விட வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். இறுதியாக அவள் நான் யோசிக்கிறேன் என்று கூறிச் சென்று விட்டாள்.

அவள் மறுநாள் வந்து, சரி நான் பாகிஸ்தான் வருகிறேன் என்றாள். அதற்கு நான் நீ பாகிஸ்தான் வந்தால் நல்ல விதமாக இஸ்லாத்தைப் புரிந்து கொள்ள நான் உறுதுணையாக இருப்பேன் என்று கூறினேன். அதற்கு நானே டிக்கெட் எடுத்துக் கொள்கிறேன். அங்கு நான் தங்குவதற்கு நல்ல ஹோட்டலும் புக்கிங் செய்து கொள்கிறேன் என்றாள். அங்கிருந்து கொண்டே, பள்ளிகளை மதரஸாக்களை காணச் செல்வேன் என்று கூறினாள்.

அதற்கு நான் இல்லை நீ என்னுடைய வீட்டில் தங்கிக் கொள். அங்கு என்னுடைய தாயும், சகோதரிகளும் உள்ளனர். அவர்கள் உனக்கு இஸ்லாம் சம்பந்தப்பட்ட நிறைய விஷயங்களை கற்று தருவார்கள். குறிப்பாக என் சகோதரி வி.கி., படித்துள்ளாள். என் தாயும் படித்திருக்கிறார்.

இதைக்கேட்ட அவள் சரி அவர்களை என் தங்கும் இடத்திற்கு அழைத்து வரவும். நான் அவர்களுடன் பேசிவிட்டு எனக்கு பிடித்திருந்தால் உன் வீட்டிற்கு ஒருநாள் சாப்பிட வருகிறேன் என்று கூறினாள்.

இதுவே பெரியது என்றெண்ணி சரி என்று தலையசைத்தேன். உடனே நான் என் தாய் மேலும் சகோதரிக்கு போன் செய்து நான் என் தேவதையை அழைத்து வருகிறேன். நீங்கள் எப்படியாவது அவளை எனக்கு திருமணம் முடித்து வைத்து விடவேண்டும். எனவே தயாராக இருங்கள் என்றேன். நாங்கள் புறப்பட இன்னும் பத்து நாட்களே இருந்தன. அந்த பத்து நாட்கள் மிக மெதுவாக நகர்ந்தன. பலர் உறக்கத்தில் தான் கனவு காண்பார்கள். ஆனால் நானோ பகல் கனவு கண்டுகொண்டிருந்தேன்.

நான் பாகிஸ்தான் சென்றடைந்து அவள் என் மனைவியாகி என் வாழ்வு இப்படி இப்படியெல்லாம் மகிழ்ச்சியாக கழியும் என்பது போன்ற கனவு கண்டு கொண்டு இருந்தேன். என் குடும்பத்தார் எல்லாம் எப்பேற்பட்ட பெண்ணை மனைவியாக்கி உள்ளாய் என்று வியந்து பார்ப்பார்கள். பல மணி நேரங்கள் இதே கற்பனையில் மூழ்கி இருந்தேன். இவள் கட்டாயம் என் மனைவியாகி விடுவாள் என்ற முழு நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுவிட்டது.

நான் ஏர்போட்டை அடைந்தபின் அவள் வருவாளா? அல்லது வரமாட்டாளா? என்று நீண்ட நேரம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். கொஞ்ச நேரத்தில் அவள் தன் பொருட்களுடன் வந்து பயணிகளின் வரிசையில் நின்று கொண்டாள். நான் எனக்கு டிக்கெட் எடுத்து விட்டேன்.

நானும் உன்னோடு வருகிறேன் என்று கூறினாள். அப்போது தான் எனக்கு அவள் வருவது உறுதியானது. ஒரு வழியாக நாங்கள் இருவரும் லாகூரில் இறங்கினோம்.

லாகூரில் நாங்கள் கோடிக்கணக்கில் வியாபாரம் செய்து வருகிறோம். அங்கு ஒரு பெரிய வீடும் எங்களுக்கென்று உள்ளது. அத்தோடு எங்களுக்கென்று அங்கே ஒரு கார் ஷோரூமும் உள்ளது. எங்கள் குடும்பம் அங்கு பெரும் கண்ணியம் வாய்ந்த குடும்பமாக கருதப்படுகிறது. எனக்கு இது அனைத்தையும் பார்த்தவுடன் மறுநாளே அவள் திருமணத்திற்கு தயாராகி விடுவாள் என்பதில் முழு நம்பிக்கை இருந்தது.

பிறகு நாம் விரும்பியபடி வாழ்க்கை அமைந்துவிடும் என்று எண்ணினேன். நாங்கள் லாகூரில் இறங்கியவுடன் அவள் முன்பதிவு செய்திருந்த ஹோட்டலின் வாகனம் அவளை அழைத்து செல்ல வந்திருந்தது. நான் இப்போது களைப்பாக உள்ளேன். எனவே ஹோட்டல் சென்று ஓய்வு எடுக்கிறேன். நாளை நீ உன் தாய் சகோதரியை என்னிடம் அழைத்துவா என்றாள். மறுநாள் நான் என் தாய் மற்றும் சகோதரியை அவளிடம் அந்த ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றேன்.

அவர்கள் அவளிடம் உனக்கு இங்கு உணவிற்கு சிரமமாக இருக்கலாம். மேலும் உணவில் ஹலால் பேணப்படுகிறதா அல்லது இல்லையா என்பதெல்லாம் தெரியாது. எனவே நல்ல ஹலாலான உணவு எங்கள் வீட்டில் உள்ளது. நீ எங்களிடம் வந்தால் நாங்கள் உனக்கு உணவளிக்கிறோம். நாங்கள் சைனீஸ் உணவு வகைகளையும் மற்ற உணவு வகைகளையும் சமைக்கத் தெரிந்துள்ளோம்.

இந்த பேச்சிற்கு சாதாரண நபரே தடுமாறி விடுவார் என்றிருக்க, செய்வதறியாது உள்ள அவள் என்ன மறுத்துவிடுவாளா! இறுதியில் நிர்பந்தமாக சரி நான் வருகின்றேன் என்று ஒப்புதல் தெரிவித்து விட்டாள். அவள் வீட்டுக்கு சாப்பிட வந்த போது என் சகோதரி அவளிடம் ஏன் நீ ஹோட்டலை காலி செய்து விட்டு இங்கே வந்து எங்கள் வீட்டிலே தங்கி கொள்ளலாமே! என்று கூறினாள்.

வீட்டில் நிறைய பெண்கள் இருப்பதால் பாதுகாப்பு கிடைக்கும் வேறு எந்த சிக்கலும் இல்லை என்றெண்ணி வீட்டில் தங்குவதற்கு அவளும் தயாராகி விட்டாள். என் தாயோ அவளை சந்தித்த முதல் சந்திப்பிலேயே தன் மகளாகவே எண்ண ஆரம்பித்து விட்டார். இன்றிலிருந்து நீயும் எனக்கு மற்றொரு மகளைப் போன்று என்று அவளிடம் கூறினாள். எனக்கு இவள் ஒரு மகள். நீ ஒரு மகள் என்று என் தாயும் அவளோடு இணக்கம் ஆகிவிட்டாள்.

என் சகோதரி அவளிடம் நான் எனக்கு தோழியாக யாரையேனும் ஆக்கிக் கொள்ள விரும்பி இருந்தேன். நீ எனக்கு நல்ல தோழியாக வந்து விட்டாய் என்று கூறினாள். என் தாயும் சகோதரிகளும் நிறையவே அவளிடம் பேசினார்கள். அவர்களின் அனைத்து பேச்சுக்களையும் அவள் அமைதியாக கேட்டுக் கொண்டாள். என் தாய் அவளிடம் நீங்கள் இருவருமே இன்ஜினியர்கள், ஒரே இடத்தில் வேறு வேலை செய்கிறீர்கள், எவ்வளவு பொருத்தமான ஜோடியாக உள்ளீர்கள், ஏன் நீங்கள் இருவரும் திருமணம் முடித்துக் கொண்டு அங்கு சென்ற கணவன் மனைவியாக வாழலாமே! என்று கூறினாள்.

நான் மனதளவில் அதற்கு தயாராக இல்லை என்று அவள் கூறியபோது, பரவாயில்லை ஓரிரு தினங்கள் நாங்கள் எதிர்பார்க்கிறோம். யோசித்து நல்ல முடிவைக் கூறு என்றாள். இவ்வாறு ஏறத்தாழ ஒரு வாரம் கழிந்தது. பிறகு இரண்டாவது வாரம் தொடங்கியபோது எனக்கு கவலையும், குழப்பமும் ஏற்பட்டது. நான் என் தாய், சகோதரியிடம் என்னுடன் திருமணம் முடித்துக் கொள்ள இவள் தயாராக இல்லை என்றால் பரவாயில்லை.

என் சிறிய சகோதரன் உள்ளான். அவனும் படித்தவன், என்னை விட இன்னும் அழகான வாலிபனாக உள்ளான். அவனையாவது திருமணம் முடித்துக் கொள்கிறாயா என்று அவளிடம் கேட்கக் கூறினேன். அவ்வாறு என் சகோதரன் விஷயமாகவும் திருமணப் பேச்சை என் தாய் பேசத் தொடங்கியபோது அவள் அதையும் மறுத்து விட்டாள். இவள் என்னதான் எண்ணுகிறாள் என்று தெரியாமல் என் தாய் திகைத்துப் திகைத்துப் போனாள்.

என்னுடைய ஒரு சிறிய தந்தை தப்லீக் ஜமாத்தில் அதிக ஈடுபாடு கொண்டவராக இருந்தார். அவர் ராவல்பிண்டியில் வசித்து வந்தார். அவருடைய மகன் ஜாபீர் மதரசா அஷ்ரஃபியாவில் படித்து ஆலிம் பட்டம் பெற்றிருந்தார். எங்களுடைய குடும்பத்தில் எல்லோரையும் விட பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியவராக அவர் இருந்தார். சாதாரண செருப்பணிந்து , மிகவும் கந்தலான உடையுடன் தலையில் தொப்பி அணிந்தவராக, எளிமையான உணவுப் பழக்கம் கொண்டவராக வாழ்ந்து வந்தார்.

அவரது படிப்பும் இதே நிலையில் பூர்த்தியானது. என்னுடைய அந்த சிறிய தந்தை மகன் ஏதோ பொருளை

என் தாயிடம் கொடுக்க என் வீட்டிற்கு ஒருநாள் வந்திருந்தார். இப்பெண் அந்த தாடி உள்ள நபரை பார்த்தவுடன் என் தாயிடம் இவர் யார்? என்று கேட்க என்னுடைய துரதிர்ஷ்டம்! என் தாய் இது என்னுடைய கணவரின் சகோதரன் மகன், ஆலிமாக உள்ளார் என்றாள்.

அதற்கு அவள் நான் இவரிடம் இஸ்லாம் சம்பந்தமாக ஏதேனும் கேட்க முடியுமா? என்று கேட்டாள். மிக நல்லது கட்டாயம் கேட்டு தெளிவு பெற்றுக் கொள் என்று என் தாய் அவரிடம் இதுபற்றி பேசியபோது நான் எந்த அந்நிய பெண்ணுடன் பேச மாட்டேன் என்று முதலில் அவர் மறுத்து விட்டார். ஆனால் மீண்டும் மீண்டும் என் தாய் வற்புறுத்தியபோது இறுதியில் அவர் பேசத் தயாராகி விட்டார். ஆனால் கோபம் கொண்ட நபர் பேசுவது போல் கடுகடுப்பாகவே பேசுவார்.

அவளின் பால் ஏறெடுத்தும் பார்க்கமாட்டார். இன்னும் புரியும் தோரணையில் தெளிவாகவும் பேசவில்லை. அவளும் சில விஷயத்தை கேட்டுவிட்டு பிறகு இவர் பட்டும் படாமல் பேச, உங்களுடைய ஏதேனும் போன் நம்பர் இருந்தால் தரவும். நான் போனில் சந்தேகம் கேட்டுக் கொள்கிறேன் என்றாள். அவரும் சரி என்று ஒரு நம்பர் கொடுக்க, அவள் பெற்றுக் கொண்டாள்.

மறுநாள் அவள் ஏறத்தாழ ஒரு மணி நேரம் போனில் மார்க்க விளக்கங்களை கேட்க, அவர் அவள் கேட்டதை விட சற்று கூடுதலாக திருப்திகரமாக விளக்கமளித்தார். இதற்குப் பிறகு அவள் நான் உங்களை திருமணம் செய்து கொள்ள வாய்ப்பு உள்ளதா என்றாள். நான் என் வீட்டாரிடம் ஆலோசித்து விட்டு கூறுகிறேன் என்று அவர் கூறினார். இவ்விஷயத்தை என் தாய் என்னிடம்

கூறியபோது அந்த வாலிபரின் தந்தை இதற்கு மறுப்பு தெரிவித்து விட வேண்டும் என்று நான் துஆ செய்து கொண்டிருந்தேன்.

அவர் தன் தந்தையிடம் இதுபற்றி கேட்டபோது, மகனே! நாம் மார்க்க சேவைக்காகவே வாழவேண்டும். ஒரு கால் உன் ரிஜ்கை அல்லாஹ் அங்கு வைத்துள்ளான் என்றால் அங்கே சென்று தீன்பணி செய்ய உறுதி கொள் என்றார். அவ்வாலிபர் மறுபடியும் போன் செய்து அவளிடம் சம்மதம் தெரிவித்துவிட்டார். இருதரப்பு சம்மதம் ஏற்பட்ட உடன் உடனடியாக அருகில் உள்ள பள்ளியில் சாட்சிகள் முன்னிலையில் அவளுக்கு அந்த வாலிபருடன் திருமணம் நடந்து முடிந்தது.

மறுநாள் அவள் தன் கணவனை அழைத்துக் கொண்டு ஜெர்மனிய தூதரகத்திற்கு சென்று நான் ஜெர்மனியை சேர்ந்த இன்ஜினியராவேன். இங்கு பாகிஸ்தானுக்கு விடுமுறையை கழிக்க வந்தேன். இவருக்கும் எனக்கு நட்பு ஏற்பட்டு நான் இவரைத் திருமணம் செய்து கொண்டேன். எனவே என்னுடன் ஜெர்மன் செல்ல இவருக்கும் விசா ஏற்பாடு செய்து தர வேண்டும் என்றாள்.

அவர்கள் பத்து வருடத்திற்கான மல்டிபிள் விசா வழங்கினார்கள். அவள் அந்த மௌலவியை அழைத்துக் கொண்டு ஜெர்மன் சென்று விட்டாள். நாங்கள் இக்காட்சிகள் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை. இந்த சம்பவத்தை கூறி விட்டு, எனவேதான் நான் “அல்லாஹ் மௌலவிகளுக்கு சாதகமாகவே செயல்படுகிறான்” என்று கூறினேன் என்றார். எனவே அவனே நல்லோர்களின் பொறுப்பாளனாக இருக்கிறான்.

அவனுடைய நல்லடியார்கள் சிந்திக்காத விதத்தில் அவர்களின் தேவைகளை அல்லாஹ் பூர்த்தி செய்கிறான். எந்த அடியான் பாவங்களை விட்டு விலகிவாழ உறுதி கொள்கிறாரோ அல்லாஹ் அவருக்கு மிக அதிக உதவி செய்கிறான். அல்லாஹ் தன் நல்லடியார்களை எவ்வாறு ஒரு அதிகாரி தன் உறவினர்களை வழமையை விட கூடுதலாக பாதுகாத்து பராமரிப்பாரோ அதுபோன்றே கூடுதலாக பாதுகாத்து பராமரிக்கிறான்.

எனவே அல்லாஹ்வின் பொறுப்பின் கீழ் நம்மை ஆக்கிக் கொள்வதே இலகுவான வழியாகும். சிலருடைய தொடர்புகள் மேலும் வசதி வாய்ப்பு கூடுதலாக இருந்தால் அவர்களைப் பற்றி நாம் இவரது கை பெரியது என்று கூறுவோம். அல்லாஹ்வின் மீது சத்தியமிட்டு கூறுகிறேன் இறைநேசர்களின் கரங்கள் இதை விடப் பெரியதாகும். இறைவனின் கருவூலத்தில் இருந்து நேரடியாக பெறக் கூடிய அளவு பெரியதாகும். இதை விளக்கவே சில மகான்கள் “இறைநேசர்களின் கரம் இறைவனுடைய பாக்கெட்டில் உள்ளது” என்று கூறுவார்கள்.

## முல்லாஜியூன் என்ற மகானின் பொறுப்பாளன் (உன் படையா! என் படையா!)

முல்லாஜியூன் என்ற பெயருள்ள ஒரு மகான் வாழ்ந்து வந்தார். ஒருமுறை அவர்களுடைய நாட்டு மன்னனுக்கு ஒரு மார்க்க தீர்ப்பு அன்னாரிடம் கேட்க வேண்டியிருந்தது. எனவே உடனடியாக தன் சிப்பாய் ஒருவரை அன்னாரிடம் அனுப்பி வைத்தார். ஹதீஸ் பாடம் நடத்திக்கொண்டிருக்கும் போது அந்த சிப்பாய் கதவுக்கு அருகில் வந்து நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தார்.

அம்மகான்களுக்கு ஹதீஸ் பாடம் நடத்தும் போது சுற்றி என்ன நடக்கிறது என்று தெரியவா போகிறது! மிக ரசனையுடன் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்கள். ஏறத்தாழ ஒரு மணி நேரம் அந்த சிப்பாய் நின்றுவிட்டு பிறகு பாடம் முடிந்தவுடன் ஃபத்வா கேட்டு விட்டு சென்றார். ஆனால் என்னை ஒரு மணி நேரம் இவர் நிற்க வைத்து விட்டாரே என்ற குமுறல் அவனுடைய உள்ளத்தில் இருந்தது.

எனவே அரசனிடம் வந்து ஏதேதோ அபாண்டங்களை அவிழ்த்து வைத்துவிட்டான். மன்னரே அவர் உங்களை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. அவர் உங்களுக்கு எதிராக ஒரு பெரும் படையை திரட்டிக் கொண்டிருக்கிறார். தாங்கள் மிக எச்சரிக்கையாக இருங்கள். நான் தங்களின் சிப்பாய்க்கான சீருடையுடன் சென்றும் கூட ஒரு வாட்ச்மேனை விட மிகக் கீழ்த்தரமாகவே அவர் என்னோடு நடந்து கொண்டார். அவர் இவ்வாறு மன்னனிடம் இல்லாது பொல்லாதவைகளை கூறிய போது, அவரை கைது செய்து வாருங்கள் என்று தன் படையினருக்கு மன்னர் உத்தரவு என்று தன் படையினருக்கு மன்னர் உத்தரவு பிறப்பித்தார்.

அம் மன்னனின் மகன்களில் ஒருவர் அன்னாரிடம் கல்வி கற்றுக் கொண்டிருந்தார். தந்தை இவ்வுத்தரவை பிறப்பித்தை அறிந்ததும் ஆசிரியரிடம் ஓடோடி வந்து என் தந்தை தங்களை கைது செய்ய உத்தரவு பிறப்பித்துள்ளார். இன்னும் சற்று நேரத்தில் போலீஸ் தங்கள் வரை வந்து விடும் என்றார். அதற்கு ஹஜ்ரத் அவர்கள் சரி உளூ செய்யத் தண்ணீர் கொண்டு வா! நானும் இரண்டு ரக்அத்கள் தொழுது என் படையை தயார் செய்கிறேன் என்றார்கள்.

அந்த சிறுவன் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்து உளூ செய்ய வைத்துவிட்டு அன்னார் முஸல்லாவில் நின்றவுடன் வேகவேகமாக தந்தையிடம் ஓடிவந்தான். அச்சிறுவன் மிகவும் புத்திசாலியாக இருந்ததால் தந்தையிடம் தந்தையே முல்லாஜியூன் உளூ செய்து தொழ நின்று விட்டார்கள். தொழுது துஆவில் கை உயர்த்திவிட்டால் உங்களது முடிவு என்னவாகும் என்று தெரியாது என்று கூறினான்.

உடனே அம்மன்னன் செருப்பு கூட அணியாமல் பதறிப்போய் வேகவேகமாக அன்னாரிடம் ஓடி வந்து அவர்களுடைய கால்களை இறுகப் பிடித்துக் கொண்டார். தயவுசெய்து எங்களுக்கு எதிராக பத்துவா செய்து விட வேண்டாம். எங்களின் சந்ததிகளெல்லாம் அதனால் நாசமாகி விடும் என்று கெஞ்சினார்.

இறைநேசர்கள் யாருடைய ஆதரவும் இல்லாதவர்கள் என்றா எண்ணிக் கொண்டீர்கள்!. அவர்களுக்கு பொறுப்பாளன், பாதுகாவலன் யாருமில்லை என்றா எண்ணிக்கொண்டீர்கள்!. மாறாக அவர்களின் பொறுப்பாளனாக, பாதுகாவலனாக, உதவியாளனாக அவர்களுடைய இறைவன் இருக்கிறான் என்பதை மறந்துவிடாதீர்கள். ஆக அவனே நல்லோர்களாக வாழும் அனைவருக்கும் பொறுப்பாளனாக இருக்கிறான்.

## ராபியா பஷரிய்யாவின் பொறுப்பாளன் (சிட்டுக் குருவிக்கும் இங்கு சிறகடிக்க அனுமதியில்லை)

ஒரு நாள் ராபியா பஷ்ரிய்யா ﵀ அவர்கள் தன் வணக்க அறையில் வணக்கம் செய்தவாறே கண்ணயர்ந்து விட்டார்கள்.அப்போது தன் மீது ஒரேயொரு போர்வை

மட்டுமே போர்த்தி இருந்தார்கள். எங்கெங்கோ சுற்றிவிட்டு எதுவும் கிடைக்காமல் கோபத்திலிருந்த ஒரு திருடன் ராபியா ﵂ அவர்களின் அறைக்குள் நுழைந்தான். அவன் அப்போது குடிபோதை உள்ளவனாக இருந்தான். அவன் வீட்டில் நுழைந்தபோது அங்கு ஒரு நபர் தூங்கிக் கொண்டிருப்பதையும் அவர் மீது ஒரேயொரு போர்வை இருப்பதையும், அவரை சுற்றி வேறு எந்த பொருளும் இல்லாமல் இருப்பதையும் பார்த்தான்.

அந்தப் போர்வையாவது உள்ளதே, அதையாவது எடுத்துச் செல்வோம் என்று அவன் எண்ணினான். எனவே அவர் அந்தப் போர்வையை எடுத்துச் செல்ல அவர்களின் அருகில் நெருங்கிய போது தலைசுற்றல் போன்று ஏற்பட்டு எதுவும் தெரியாமல் இருளாகிவிட்டது. அதனால் பயமும், பதட்டமும் அவனுக்கு ஏற்பட்டுவிட்டது. பதட்டத்தில் அவன் எடுத்த போர்வை நழுவி கீழே விழுந்துவிட்டது. அப்போது திடீரென கதவின் திசையில் ஒரு வெளிச்சம் தென்பட்டது.

எனவே அவன் கதவை நோக்கி ஓடினான்."ஒரு நண்பன் உறங்க மற்றொரு நண்பன் விழித்திருக்கிறான். இங்கு சிட்டுக்குருவிக்கும் சிறகடிக்க அனுமதி இல்லை என்ற போது இங்கிருந்து எதை நீ தூக்கிச் செல்வாய்" என்ற ஒரு அசரிரி சப்தம் அவனுக்கு கேட்டது. ஆக அவனே நல்லோர்களின் பொறுப்பாளனாக உள்ளான் என்பதை அறிந்து கொள்ள இதுவே போதுமான சான்றாகும்.

## ஒரு மூதாட்டியின் பொறுப்பாளன்
## (நான் இல்லாத போது நீ எங்கு போனாய்?)

ஒரு மூதாட்டி தன்னுடைய ஒரு சிறிய குடிசையில்

வாழ்ந்து வந்தாள். அவளுடைய வீடு அந்நாட்டு மன்னனின் மாளிகையின் சுற்றுச்சுவருக்கு அருகில் இருந்தது. அவன் தன் மாளிகையை விசாலமாக்கத் திட்டமிட்டான். அதனால் அந்த மூதாட்டியின் குடிசையை அப்புறப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. ஒரு சிப்பாய் அந்த மூதாட்டியிடம் வந்து "மன்னர் தன் மாளிகையை உன் குடிசை வரை விசாலமாக்கத் திட்டமிட்டுள்ளார்". எனவே நீ இங்கிருந்து வேறு இடத்திற்கு மாறி விடு என்றார்.

அதற்கு நான், இங்கிருந்து செல்ல முடியாது என்று அவள் மறுத்தாள். அந்த சிப்பாயி தாயே! இதற்கு பகரமாக தங்களுக்கு வேறு இடத்தில் நான் வீடு கட்டித் தருகிறேன் என்று மன்னர் கூறினார் என்றான் . நான் காலம் முழுக்க இங்கேயே வாழ்ந்து விட்டு, இன்னும் சொற்ப நாட்களே மீதமுள்ள நிலையில் இங்கிருந்து போய் வேறு இடத்தில் வசிப்பேனா? என்னை தொந்தரவு செய்ய வேண்டாம். நான் இங்கிருந்து செல்ல முடியாது என்று கூறி மறுத்துவிட்டாள்.

அதற்குப் பிறகு மன்னனிடம் இதைக் கூறுவதற்கு அந்த சிப்பாயி சென்றுவிட இந்த மூதாட்டியும் தனது உறவினர் வீட்டு வைபவத்தில் கலந்து கொள்ள வெளியூர் சென்றுவிட்டாள். அவளுடைய மறுப்பை செவியுற்ற மன்னன் கோபம் கொண்டு அவளிடம் போய் நீ எதற்காக கேட்டுக் கொண்டிருக்கிறாய்! அங்கு சென்று அவளின் குடிசையைத் தகர்த்து விட்டு, மாளிகையை விசாலமாக்கி விடு என்று உத்தரவிட்டான்.

அவள் ஒரு மாதம் கழித்து தன் ஊருக்கு திரும்பிய போது அங்கு குடிசையிருந்த அடையாளமே இல்லாமல் மாளிகை விசாலமாக்கப்பட்டு கட்டடி வேலையெல்லாம் முடிவுற்றிருந்தது. இதைக் கண்ட அவள் ஆச்சரியத்துடன்

ஒருவர் மாறி ஒருவரிடம், இங்கே இருந்த என் குடிசை என்னவாயிற்று, என்று கேட்டுக் கொண்டிருந்தாள். யாரோ ஒருவர், நீ ஊரில் இல்லாதபோது மன்னன் உன் குடிசையை இடித்து விட்டு தன் மாளிகையை கட்டி விட்டார் என்று கூறினார்.

இதை செவியுற்ற அவள் வானத்தின் பால் பார்த்து "இறைவா நான் இங்கு இல்லாத போது நீ எங்கு இருந்தாய்?. நான் இல்லாத போது நீயுமா இல்லாமல் இருந்தாய்! என்று கூறினாள். அவள் இவ்வார்த்தையை கூறி முடிக்கவுமில்லை திடீரென அம்மாளிகை இடிந்து விழுந்து தரைமட்டமானது. ஆக அவனே நல்லோர்களின் பொறுப்பாளனாக இருக்கிறான் என்பதை அறிய வேண்டாமா?

ஈமான் கொண்ட அடியார்களுக்கு பாவங்களை விட்டு விட்டு அல்லாஹ்வின் அரவணைப்பில் வருதல் என்பது மிக இலகுவான காரியம் ஆகும். நாம் தான் தேவையில்லாமல் சிரமத்தில் சிக்கி தவித்து வருகிறோம். நாம் அல்லாஹ்வுடைய பணிகளில் கவனம் செலுத்தினால் அல்லாஹ் நம் பணிகளை இலகுவாக்குவான்.

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا اَنْ تَنْصُرُوا اللّٰهَ يَنْصُرُكُمْ وَ يُثَبِّتْ اَقْدَامَكُمْ

"ஈமான் கொண்டவர்களே நீங்கள் அல்லாஹ்விற்கு உதவி செய்தால் அல்லாஹ் உங்களுக்கு உதவுவான். மேலும் உங்கள் பாதங்களை உறுதிபடுத்துவான்" என்று குர்ஆனில் அல்லாஹ் கூறியுள்ளான்.

இன்று எத்தனையோ பெண்மணிகள் ஹஜ்ரத்! என் கணவர் என் மீது பிரியம் கொள்வதில்லை என்று

புலம்புகிறார்கள். அதற்கு ஒரு தீர்வு, நீங்கள் நல்லவர்களாக மாறி விடுங்கள். உங்களுக்கு அல்லாஹ் பொறுப்பாளன் ஆகிவிடுவான். வீடும் தருவான், வீட்டில் உள்ளவரின் பிரியத்தையும் ஏற்படுத்துவான்.

அவ்வாறே இன்று எத்தனையோ நபர்கள் வியாபாரம் விறுவிறுப்பாக இல்லை என்கின்றனர். நீங்கள் அல்லாஹ்வின் பணிகளில் பங்களிப்பு செய்தால் அல்லாஹ் உங்களின் பணிகளை சீராக்குவான் என்பதே நாம் அவர்களுக்கு கூறும் தீர்வாகும்.

## இறை உத்தரவை பின்பற்றுபவரின் பொறுப்பாளன்

## (நீ எனக்காகவெனில் நான் உனக்காக..)

ஒரு அரபு நாட்டவரின் சம்பவம் புத்தகங்களில் எழுதப்பட்டுள்ளது. அவர் ஒர் சந்தர்ப்பத்தில், ஜும்ஆவுடைய நாளில் தொழுகைக்கு செல்ல தயாரிப்பு செய்து கொண்டிருந்த நேரத்தில், உங்களுடைய தோட்டத்திற்கு தண்ணீர் திறந்து விடப்போகிறார்கள் என்று கூறப்பட்டது. அப்போது நிலவிய தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க இது போன்று தண்ணீர் திறந்து விடும் போது தோட்டம், காடுகளுக்கு நீர் பாய்ச்சிக் கொள்வது தான் சாதுர்யமான விஷயமாக இருந்தது.

ஜும்மா தொழுகைக்கு சென்று விட்டால் வயலுக்கு நீர் பாய்ச்ச முடியாமலாகிவிடும். எனவே விளைச்சல் எதிர்பார்த்த அளவு கிடைக்காமல் போகலாம் என்பதால் அவருடைய மனைவி அவரிடம் முதலில் வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுங்கள்! பிறகு தொழுதுகொள்ளலாம்

என்று கூறினாள். ஆனால் அவரோ ஜும்ஆவிற்காக அழைத்த பிறகு நான் தொழுகைக்குத் தான் செல்வேன் என்று கூறிவிட்டுப் புறப்பட்டுவிட்டார்.

அதன்படி தொழுகைக்குச் செல்ல வீட்டை விட்டு வெளியே வந்தபோது அவருடைய ஒட்டகம் ஒன்று காணாமல் போய்விட்ட விபரம் தெரிந்தது. ஒட்டகத்தை பொறுத்தவரையில் அதை எவ்வளவு துரிதமாக தேடுவோமோ அந்தளவு விரைவாக கிடைக்க வாய்ப்புகள் இருக்கும். தேடுவதை தாமதித்தால் அது கிடைப்பது சிரமம் ஆகிவிடும். ஒட்டகமும் தவறிவிட , விவசாயமும் நட்டமானால் நம் நிலை என்னாவது என்று எண்ணி அவர் கவலைப்பட்டார்.

ஆனால், நான் இப்போது தொழுகைக்குச் செல்ல வேண்டும் மற்றதை பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று உறுதியுடன் புறப்பட்டுவிட்டார். அவர் வேகவேகமாக தொழுகையை முடித்தவுடன் வயலுக்குச் சென்று பார்த்தால் வயல் முழுக்க தண்ணீரால் நிரம்பி இருந்தது. என் தோட்டத்திற்கு யார் தண்ணீர் பாய்ச்சியது? என்று அறிய அங்கேயே நின்று சுற்றி பார்த்துக் கொண்டிருந்தார். அருகில் உள்ள நிலத்தின் உரிமையாளர் வந்து நான் என் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச வந்தபோது நீண்ட நேரமாகியும் (வர வேண்டிய முறை பிரகாரம்) தண்ணீர் வராததால் இங்கு வந்து பார்த்தேன்.

என் தோட்டத்திற்கும் உன் தோட்டத்திற்கும் மத்தியில் உள்ள வரப்பு, ஒன்று உடைந்திருந்தது. அவ்வாறே விட்டுவிட்டு நான் என் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சிய போது உன் தோட்டத்திற்கும் தானாகவே தண்ணீர் பாய்ந்து விட்டது என்று அவர் கூறினார்.

அதற்கு அல்ஹம்துலில்லாஹ் என்று கூறியவராக இனி ஒட்டகத்தின் நிலை என்னவானது, என்று பார்க்க அவர் வீடு நோக்கி திரும்பினார்.

வீட்டிற்கு வந்த போது வீட்டின் முற்றத்தில் ஒட்டகம் கட்டப்பட்டு இருந்தது. அவர் மிகவும் மகிழ்ந்தவராக இந்த ஒட்டகம் எங்கிருந்து வந்தது என்று தன்னுடைய மனைவியிடம் கேட்டார்.

அதற்கு அவள், நான் மாவு பிசைந்து கொண்டிருந்த போது வீட்டின் வெளியே நாய்கள் குரைக்கும் சப்தம் கேட்டது. நான் வேகமாக வெளியில் வந்து பார்த்த போது நம் ஒட்டகத்தை சில நாய்கள் குரைத்துகொண்டே துரத்தி வந்தன. முன்னால் ஓடி வந்த ஒட்டகம் நேராக நம் வீட்டில் நுழைந்து கொண்டது.

நான் அதைப்பிடித்து திண்ணையில் கட்டிவிட்டேன் என்று கூறினாள். இதை கேட்டவுடன் நான் அல்லாஹ்வின் உத்தரவை பூர்த்தி செய்ததால் அல்லாஹ் என் வேலையில் உதவி செய்துவிட்டான் என்று கூறினார்.

நாம் நல்லவர்களாக மாறாமலேயே நமது காரியங்கள் அனைத்தும் சீர் பெற வேண்டுமென்று நினைத்தால் அது கற்பனையாகும்.

நாம் நல்லவர்களாக மாறாத காரணத்தினால் தான் நமது வேலைகள் பூர்த்தியாகாமல் அங்கும், இங்கும் முட்டி மோதி அள்ளல்பட்டுக் கொண்டிருக்கிறோம். எனவே வாருங்கள் இன்றைய தினமே தவ்பா செய்து நல்வாழ்க்கை வாழ உறுதி கொள்வோம். அல்லாஹ்வின் பொறுப்பின் கீழ் ஆகுவதற்கு முயற்சி செய்வோம்.

## ஒரு மதரஸாவின் பொறுப்பாளன்.
## (பார்வைக்குத் தெரியாத பல படைகள்)

கண்ணியத்திற்குரிய எனது மாமனார் அப்துல் மாலிக் சித்திகீ ﷺ அவர்கள் இந்தியாவில் புதுதில்லி அருகில் ஒரு மதரசாவை நிறுவினார்கள். இது இந்திய-பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்புள்ள விஷயமாகும். அல்லாஹ்வின் கிருபையால் அம்மதரசா மிக சிறப்பாக செயல்பட்டது. பலநூறு மாணவர்கள் அதில் கல்வி பயின்று வந்தனர். அதன் பிறகு இந்திய-பாகிஸ்தான் பிரிவினை நடந்தது. அப்பிரிவினையின் போது எங்கு முஸ்லிம்கள் மிகுதியாக இருந்தனரோ அங்குள்ள மக்கள், இந்துக்கள், சீக்கியர்களை கொலை செய்தனர்.

மேலுல் எங்கு இந்துக்கள் சீக்கியர்கள் மிகுதியாக இருந்தனரோ அங்குள்ளவர்கள் முஸ்லிம்களைக் கொன்று குவித்தனர். அப்பொழுது ஹஜ்ரத் அவர்கள் மதரசாவில் உள்ள அனைவரிடமும், கதவை தாழிட்டுக் கொண்டு மதரசாவின் அறையிலேயே இருங்கள். எக்காரணத்தைக் கொண்டும் வெளியே வந்துவிட வேண்டாம் என்று கூறினார்கள். அதன்படி அனைவரும் அறையிலேயே முடங்கிக்கிடந்தனர்.

ஒரு ஆசிரியர் மட்டும் அவசிய தேவைக்காக அருகிலுள்ள தெருவிற்கு செல்ல நாடினார். அவர் ஹஜ்ரத் அவர்களிடம் அனுமதி கேட்டபோது மிக ஜாக்கிரதையாக சென்று வரவும் என்று அவருக்கு அனுமதியளித்தார்கள். அவர் பயந்து , பயந்து மதரசாவிலிருந்து வெளியேறி சென்று கொண்டிருந்தார். செல்லும் வழியில் ஒரு சீக்கிய வாலிபன் நின்றுகொண்டிருந்தான்.

முதலில் அவனைக் கண்டு அந்த ஆசிரியர் பயந்தார். பிறகு இவரும் தனியாக உள்ளார். நானும் தனியாக உள்ளேன். ஒத்தைக்கு ஒத்தை என்ன நடக்கிறது என்று பார்த்துவிடலாம் என்று சற்று மனதை தைரியப்படுத்திக் கொண்டு முன்னேறினார். அவர் அவனுக்கு அருகில் சென்றதும் அந்த சீக்கிய வாலிபன், பாய் இன்னும் எத்தனை படைகளை வைத்துளீர் என்று கேட்டான். நீ என்ன கூறுகிறாய் என்று விளக்கம் கேட்டார்கள். அவர் இரண்டாவது முறையும் இவ்வாறே கூறிவிட்டு நான் ஏன் இப்படி கேட்கிறேன் என்றால் அருகிலுள்ள ஊர்க்காரர்களான நாங்கள் சேர்ந்து மூன்று முறை இரவில் உங்களுடைய மதரஸா பிள்ளைகள் அனைவரையும் கொலை செய்ய கத்திகளுடன் வந்தோம். எப்பொழுது வந்தாலும் உங்கள் மதரசாவை சுற்றி துப்பாக்கி ஏந்திய காவலாளிகள், படைவீரர்கள் இருப்பதைப் பார்த்தோம் என்றான்.

அந்த ஆசிரியர் இச்சம்பவத்தை நமது ஹஜ்ரத்திடம் கூறிய போது இது இறைவனின் படையாகும். அல்லாஹ் நம்மை பாதுகாப்பதற்காக அவர்களை நியமித்துள்ளான் என்று கூறினார்கள். ஏனெனில் இப் பிள்ளைகள் எந்த பெரும் பாவமும் செய்யாமல், நல்லோர்களாக வாழ விரும்பி இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்திருப்பதால் இவர்களுக்கு அல்லாஹ் இவ்வாறு உதவி செய்துள்ளான் என்றார்கள். ஆக அவனே நல்லோர்களின் பொறுப்பாளனாக இருக்கிறான்.

எனவே அல்லாஹ்வின் மீது பரிபூரணமான நம்பிக்கை வையுங்கள். நாம் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளாமல் அவனல்லாத மற்றவைகளின் மீது அதிக நம்பிக்கை கொண்டிருப்பது எவ்வளவு வியப்பான விஷயம்.

சற்று சிந்தித்துப் பாருங்கள் அது போன்ற உறுதியான நம்பிக்கையை நாம் அல்லாஹ்வின் மீது கொள்ள முடியாத என்ன!. நிச்சயம் முடியும். ஆனால் நாம் அதில் அலட்சியமானவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

குடும்பத்தை பராமரிப்பதால் தந்தை மீது நம்பிக்கை, ஒரு தந்தைக்கு பதிலாக மூத்த சகோதரர் குடும்பத்தை பராமரித்தால் அவர் மீது நம்பிக்கை! சிறிய தந்தை மீது நம்பிக்கை! மாமாவின் மீது நம்பிக்கை! இறையடியார்களே! அல்லாஹ்வே உண்மையில் நமது பொறுப்பாளனாக உள்ளான். பிறகு ஏன் அவனை மட்டும் நாம் நம்புவதில்லை.

*“நீயோ படைத்த இறைவனை நம்பாத நிலையில்*

*சிலைகளின் மீது தான் உனக்கு எவ்வளவு நம்பிக்கை,*

*நிராகரிப்பு என்பது இதுவல்லாத வேறு எது?*

*தோழா சற்று கூறு !”*

நாம் நம் வாழ்வில் இனி ஒருபோதும் பாவமே நிகழாது என்று கூறுவதற்கு நாம் மலக்குகள் அல்ல. மாறாக பாவம் நிகழ்ந்தவுடன் வருத்தப்பட்டு உடனடியாக தவ்பா செய்து திருந்தினால் நாமும் நல்லோர்களில் உள்ளவர்களாக கணிக்கப்படுவோம். நம்முடைய அனைத்து காரியங்களும் இலகுவாகி விடும்.

அல்லாஹ் நம்முடைய அனைத்து குற்றங்களையும் மன்னித்து அவன் பொறுப்பெடுக்கக்கூடிய நல்லடியார்களில் ஒருவராக ஆக்கி அருள்புரிவானாக. ஆமீன்!

**எவர் பாவங்களைக் கைவிட்டு நன்மைகளில் ஈடுபட்டு, தூய வாழ்க்கையை வாழத் தொடங்குகிறாரோ,**

- சர்வவல்லமையுள்ள அல்லாஹ், அவனது பாதுகாவலனாகவும், காப்பாளனாகவும் , அவனை கவனித்துக் கொள்பவனாகவும் ஆகிவிடுகிறான்.
- அவன் அவனுடைய காரியங்களைச் சீர்செய்கிறான்.
- பிரச்சனைகளில் சிக்குவதிலிருந்து அவனைக் காப்பாற்றுகிறான்.
- சகலவித துன்பங்களிலிருந்து அவன் வெளிவருவதற்கு வழி வகுக்கிறான்.
- அவமானத்தின் நிழல்களிலிருந்து வெளியாக்கி கண்ணியத்தின் போர்வையால் அவனைப் போர்த்துகிறான்.
- சுருங்கக்கூறின் ஒரு தந்தை தன் பிள்ளையைப் பாதுகாப்பது போல அல்லாஹ் அவனைப் பாதுகாக்கிறான்.

## குறிப்புகள்:-